விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 25 வியாழக்கிழமை (09.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு தடை உத்தரவு விடுத்தது தவறு

### யாழ்.மேல் நீதிமன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வடக்கில் இராணுவத்தினரின் காணி அபகரிப்புக்கு எதிராக யாழ்.நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை யாழ்.நீதவான் நீதிமன்றம் தடை செய் தது தவறு என யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள் ளது.

கடந்த யூன் மாதம் 18ஆம் திகதியன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக, வடக்கில் இடம் பெறும் இராணுவத்தினரின் காணி அபகரிப்புக்கு எதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டம் சட்டமுறையற்றது என்றும், இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டால் அசம்பாவிதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக வும் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா அறிக்கையொன்றினை யாழ். நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு தடையுத்தரவு வழங்கிய யாழ்.நீதிவான் மா.கணேசராஜா, பொலி (20ஆம் பக்கம் பார்க்க)

## டெசோ மாநாடு நடக்கும்; நம்பிக்கை வையுங்கள்

### கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

டெசோ மாநாடு சொன்ன நேரத்தில் சொல்லியபடி சரியாக நடத்தப்படும். அதுபற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை எனவும், டெசோ மாநாடு பற்றி இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரத்தை உலக தமிழர்கள் நம்ப வேண்டாம் என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டெசோ மாநாடு குறித்து இலங்கை அமைச்சர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு கலைஞர் நேற்றைய தினம் பதிலளித்துள்ளார்.

அதில் இலங்கை அரசின் அறிக்கையும் இலங்கை அமைச்சர் கூறியிருப்பதும் கற்பனையான குற்றச்சாட்டின் அடிப்படையில் புனையப்பட்டது.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்காகத் தான் இந்த மாநாடு நடைபெறுகிறது. இதனைப் புரிந்து கொள்ளாமல் இலங்கை அரசு பேசுவது கவலை தருகிறது.

இலங்கை தமிழர் நலன்பேணும் முயற்சிகளை டெசோ (20ஆம் பக்கம் பார்க்க)

# கொடூரமாகத் தாக்கப்பட்ட மற்றைய கைதியும் மரணம்

## யாழினைச் சேர்ந்த டில்ருக்சன் உயிரிழப்பு

*(வவுனியா)*, வவுனியா சிறைச்சாலையிலிருந்து கடந்த மாதம் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு பின்னர் அங்கு வைத்து சிறைச்சாலை அதிகாரிகளால் கொடூரமாக தாக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதி நேற்று முன் தினம் இரவு மரணமாகியுள்ளார்.

ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்றுவந்த யாழினைச் சேர்ந்த மரியதாஸ் டில்ருக்சன் என்பவரே மரணமடைந்துள்ளதாக அவரது தந்தையார் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைப் படைக்கு இந்தியா செக்!

(புதுடில்லி)

தமிழ்நாட்டில் இலங்கை இராணுவ வீரர்களை பயிற்சியில் ஈடுபடுத்தியிருந்தபோதும் தற்போது இலங்கை இராணுவ வீரர்கள் எவரும் தமிழ்நாட்டில் இல்லையென இந்திய மத்திய அரசு மாநிலங்களவையில் தெரிவித்துள்ளது.

எழுத்துமூலம் அனுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு மாநிலங்களவையில் நேற்றுப் பதிலளித்த இந்திய மத்திய (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.ம.முன்னணி போராட அழைப்பு

தமிழ் அரசியல் கைதி டில்ருக்சனின் படுகொலையைக் கண்டித்தும், ஏனைய கைதிகளை விடுவிக்க வேண்டும் எனக் கோரியும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் முகமாகவும் எதிர்வரும் 15-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ்.பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள சோமசுந்தரப் புலவர் சிலை அருகில் (20ஆம் பக்கம் பார்க்க)

## கடும் தாக்குதலால்தான் டில்ருக்சன் உயிரிழந்தார்

### ஜயலத் ஜெயவர்த்தன குற்றச்சாட்டு

வவுனியா சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற அமைதியின்மை சம்பவத்தின் பின்னர் தாக்கப்பட்டு கடுமையான காயங்களுடன் கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்த டில்ருக்ஷன் மரியதாஸின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, இச் சம்பவத்திற்கு மிகுந்த கவலையை தெரிவிப்பதாக ஐ.தே. கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்த அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வவுனியா சிறைச்சாலை சம்பவத்தை அடுத் து தாக்கப்பட்டு; கடந்த 3 மாத காலமாக கோமா நிலையில் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த டில்ருக்சன் மரியதாஸ் (நேற்று) உயிரிழந்தமை எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு அறிக்கை அனுப்பியது இலங்கை

மனித உரிமை நிலைமை குறித்த அறிக்கையை இலங்கை அரசாங்கம் நேற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அனுப்பியுள்ளது.

ஜெனிவாவில் அடுத்த மாதம் அகில கால மீளாய்வு அமர்வுகள், ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

மனித உரிமையை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. உறுப்பு நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் அகில கால மீளாய்வு அமர்வுகளின்போது கவனம் செலுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்த இந்த அமர்வுகளின்போது உறுப்பு நாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

2008-ம் ஆண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## 42 நாடுகளின் பங்குபற்றலுடன் இராணுவக் கருத்தரங்கு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் யுத்த வெற்றி அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் இராணுவ கருத்தரங்கு 2012 நேற்றுப் புதன் கிழமை கொழும்பில் ஆரம்பமானது.

நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி எனும் தொனிப்பொருளில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று ஆரம்பமான இந்தக் கருத்தரங்கு தொடர்ந்து 3 தினங்களுக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக 63 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் 42 நாடுகள் பங்கேற்றுள்ளன.

இதன்போது அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்துள்ள பாதுகாப்பு உயர் அதிகாரிகள் விரிவுரைகளை வழங்கவுள்ளனர்.

இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு யுத்தத்திற்கு பின்னரான தீர்மானம் மற்றும் இந்தியாவின் அக்கறை என்ற தலைப்பில் விசேட உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்தம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டு 2 வருடப் பூர்த்தியில் முதலாவது கருத்தரங்கு கடந்த வருடம் நடத்தப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாத நடுப்பகுதியில் மீள்குடியேற்றம் நிறைவு!

### பாதுகாப்பு செயலர் உறுதி

யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றும் நடவடிக்கை இம்மாத நடுப் பகுதியில் நிறைவுறும் என பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் ஆரம்பமான சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதி யுத்தத்தில் 3 இலட்சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அவர்களில் இன்னும் 5 ஆயிரத்து 424 பேர் மாத்திரமே மீள் குடியேற்ற எஞ்சியுள்ளனர்.

வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வீடு பிரச்சினை உள்ளது. அதற்காக இராணுவத்தினர் வடக்கில் 7 ஆயிரம் வீடுகளை அமைத்துள்ளனர்.

அதில் 6 ஆயிரம் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சீனர்கள் கைதானதற்கு தவறான புரிதலே காரணம்

## சீன தூதரக அதிகாரி தெரிவிப்பு

இலங்கை கடற்படையினரால் சீனர்கள் கைது செய்யப்பட்டதற்கு தவறான புரிதலே காரணம் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது மீனவர்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. சீன மீனவர்கள் இழுவைப் படகுகளிலேயே தங்கவோ அல்லது வெளியில் செல்லவோ அனுமதிக்கப்பட்டதாகசீனத்தூதரகஅதிகாரியுவான்பாய்ஷெங் சீன செய்தி ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்ததற்காக கைது செய்யப்பட்ட சீன மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதாக இலங்கை கடற்படை கூறியதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் தாம் ரொய்ட்டருக்கு செவ்வி அளிக்கவில்லை என்று இலங்கை கடற்படை தம்மிடம் கூறியதாகவும் சீனத் தூதரக அதிகாரி கூறியுள்ளார். இலங்கை கடற்படை தடுத்து வைத்த சீன மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

இலங்கை கப்பல் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான - சீனாவில் வாங்கப்பட்ட இரு படகுகளில் அவர்கள் பணியாற்றி வந்தவர்கள்.

அந்தப் படகுகளில் இருந்த பழைய சீன சின்னங்கள் அவை சீனப் படகுகள் என்ற குழப்பத்தை உள்ளூரில் ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கூட சீன மீனவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பான விபரங்கள் குறித்த மேலதிகமான விளக்கங்கள் தேவைப்படுகின்றன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ந-8)

# டெசோ மாநாட்டு நாளில்

## கருணாநிதி கைவிட்ட தமிழீழத்திற்கு இந்து மக்கள் கட்சியினர் ஆதரவு

(சென்னை)

இந்து மக்கள் கட்சி சார்பில் இந்து ஈழ ஆதரவு மாநாடு வேலூர் கோட்டை மைதானம் அருகே எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெற உள்ளது என அக்கட்சியின் நிறுவனத் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வேலூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

இலங்கைத் தமிழர் இன்னல் தீரவும் இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கவும் ஒரே தீர்வு தனித் தமிழீழம்தான் என்பது எங்கள் கருத்து.

தமிழீழம் உருவாக்க மத்திய அரசை வலியுறுத்தி வேலூரில் நடைபெறும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

இதில்ஸ்ரீராம்சேனை நிறுவுனர்பிரமோத்முத்தலிக், கேரள மாநில சிவசேனையைச் சேர்ந்த புவனச்சந்திரன், தமிழர் வாழ்வுரிமை கட்சி நிறுவனத் தலைவர் வேல்முருகன், தமிழ் நாடு கொங்கு இளைஞர் பேரவை நிறுவனத் தலைவர் உ.தனியரசு உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அதேநாளில் சென்னையில் டெசோ மாநாட்டை தி.மு.க. தலைவர் கருணாநிதி நடத்துகிறார். அந்த மாநாட்டில் தனித் தமிழீழம் தீர்மானத்தை நிறைவேற்றப் போவதில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

டெசோ தொடங்கப்பட்டபோது தமிழீழம் ஒன்றே தீர்வு என எல்லாத் தலைவர்களும் பேசினர். ஆனால் அதை காங்கிரஸ் கட்சிக்குப் பயந்து கருணாநிதி கைவிட்டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கும் இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வாழும் கலை ரவிசங்கர் நடத்தும் கையெழுத்து இயக்கத்தில் இந்து மக்கள் கட்சி பங்கேற்கும் என்றார். (ந-2)


மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

06.08.2012 முதல் 12.08.2012 வரை 6 நாட்கள்மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுக மாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (சி-741)


# இசை அர்ச்சனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலய மகோற்சவத்தில் நாளை வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா நடைபெறவுள்ளது. அன்றையதினம் சுவாமி வீதியுலா வந்ததும் ஆலயத்தின் உள்வீதியில் இசைக்கலைஞர்கள் பங்கு கொள்ளும் இசை அர்ச்சனை நிகழ்வு வழமைபோல் இம்முறையும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு தொடர்பாக நம் மண்ணில் வாழும் இசை வித்தகர்கள், மிருதங்க, புல்லாங்குழல், வயலின், வீணை வித்துவான்களை ஒத்திகை நிகழ்வில் பங்கு கொள்வதற்காக இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுள்ளனர். (ந-9)

# ஓட்டோ-மோ.சைக்கிள் விபத்து ; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றிரவு பரந்தன் முல்லைத்தீவு மூன்றாம் கட்டை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் முற்றாக சேத மடைந்துள்ளது. படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-8)


HDFC GOLD LOAN

பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு

011 5737373

011 2356800

அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK

www.hdfc.lk Email: hdfc@hdfc.lk

Fitch Rating - BBB+(lka)

(C-739)


## ஒன்றுகூடல்

கடந்த 2011ம் ஆண்டு தாதியர் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வில் தோற்றி தேவையான தகுதியிருந்தும் நியமனக் கடிதம் கிடைக்காத அனைவரையும் நேர்முகத் தேர்வுக் கடிதம், க.பொ.த (சா/த), (உ/த) சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ந-8)


தவறிவிட்டது

குமாரசாமி கந்தையா என்பவரின் மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன ஏழாலைக்கும் தெல்லிப்பளைக்கும் இடையில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 0773457968

றஜீவன்,

ஏழாலை மேற்கு, ஏழாலை. (C-740)

வீடும், காணியும் விற்பனைக்குண்டு

சங்குவேலி வடக்கு, மானிப்பாயில் 7 1/2 பரப்பு காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் கிணறும் விற்பனைக்குண்டு.அத்துடன்12 பரப்பு காணியும் பயன்தரும் மரங்களுடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இராஜேந்திரா, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

தொலைபேசி இல.:0771370807, 0783014567 (183)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### சுமையை இறக்குங்கள்...!

ஒரு ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அந்த ஊரிலே எல்லோரும் கோவிலுக்குப் போவார்கள். ஆனால்... அவர் மட்டும் போவதில்லை. இது மற்றவர்களுக்கு வியப்பாக இருக்கும்...

ஒருநாள் ஒருவர் இந்த சந்தேகத்தை நேரிலேயே அவரிடம் கேட்டுவிட்டார்.

"ஐயா!... ஒரு சந்தேகம்?"

"என்ன?" என்று கேட்டார்.

"நீங்கள் கோவிலுக்குப் போவதில்லை... கடவுளிடம் எதுவும் வேண்டுவதில்லையா... அது ஏன்?"

அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார்... "அதற்குக் காரணம்... ஒரு பிச்சைக்காரன்..."

"பிச்சைக்காரனா... என்ன சொல்கிறீர்கள்...?"

"ஒரு சமயம் நான் ஒரு நகரத்திற்குப் போயிருந்தேன். அங்கே உள்ள அரசமாளிகை வழியாகப் போய்க்கொண்டிருந்தேன்.

அந்த அரண்மனை வாசலிலே ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருந்தான்.

அந்தச் சமயம் பார்த்து உள்ளே இருந்து மன்னன் வெளியே வந்து கொண்டிருந்தார். பிச்சைக்காரனைப் பார்த்தார்.

இவனோ ஒன்றும் சொல்லாமல் அப்படியே நின்று கொண்டிருக்கிறான். மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்துக் கேட்டார்; "உனக்கு என்ன வேண்டும்?" ஏன் பேசாமல் நிற்கிறாய்...?"

இதற்கு பிச்சைக்காரன், "என்னைப் பார்த்தே உனக்கு இரக்கம் ஏற்படவில்லையென்றால், நான் கேட்டால் மட்டும் எப்படி இரக்கம் வந்து விடப்போகிறது?" என்றார்.

அந்தப் பிச்சைக்காரன் சொன்னதை யோசித்துப் பார்த்தேன்... அதன்பின் கடவுளிடம் வேண்டிக் கொள்வதை விட்டுவிட்டேன்"

ஆண்டவனை அறிந்து கொண்டவர்கள் ஆலயத்திற்குப் போக வேண்டிய அவசியமில்லை.

இப்படிச் சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் போய்விட்டார். அதன் பின்னர் இவன் வழக்கப்படி வீட்டுக்கு வந்தான். சாப்பிட்டான்; படுத்துத் தூங்கினான்.

அந்தத் தூக்கதிலே ஒரு கனவு... அந்தக் கனவில் அவன் ஒரு கோவிலுக்குப் போகிற மாதிரியும் சாப்பாட்டு மூட்டைகளையெல்லாம் அவனுக்குத் தெரிந்த ஒரு கடையில் வைக்கிறான். காலணிகளை அங்கேயே கழற்றி விடுகிறான். அதன்பின் ஆலயத்தினுள் நுழைகிறான்.

அந்தக் கோவில் வாசலில் காவலுக்கு ஒரு நபர் நின்று கொண்டிருக்கிறார். உள்ளே நூழைய முற்படும் இவனை அவர் தடுத்து நிறுத்துகிறார்.

இவன் திகைத்துப் போகிறான். "என்னை ஏன் தடுத்து நிறுத்துகிறாய்?"

"நீ மட்டும் தனியாக உள்ளே செல்லலாம்... ஆனால், ஒன்று உள்ளது. உன்னுடன் இருக்கும் இந்த மூட்டையை வெளியே விட்டுச் செல்ல வேண்டும்"

இவன் அதிர்ச்சியில் தன் கைகளைப் பார்க்கிறான். அங்கே எதுவும் இல்லை.

"என்னப்பா சொல்கிறாய்? வெறும் கையுடன்தானே வந்துள்ளேன்" என்று கூறினார்.

இப்போது அந்நபர் சொல்ல ஆரம்பிக்கிறார்; "வெளியே பார்க்காதே... உள்ளே பார்... நான் சொல்லும் அந்த மூட்டை உள்ளே உள்ளது.

"என்ன சொல்கிறாய் நீ" என்று கேட்டார்.

"நான் இருக்கிறேன்- என்ற நினைப்பு உனக்குள் இருக்கிறதா... இல்லையா..."

"இருக்கிறது"

"நான் கூறியது அந்த மூட்டையைத்தான். அதை வெளியே விட்டால்... நீ உள்ளே போக முடியும்" என்றார்.

இந்தக் கட்டத்தில் தூங்கிக் கொண்டிருந்த அந்த நபர் விழித்துக் கொண்டார். கனவு கலைந்தது.

அகங்காரம் என்ற சுமையை இறக்கி வைத்தால்தான் ஆண்டவன் என்கிற வெளிச்சத்தை நாம் நெருங்க முடியும்.

"வேண்டுதல்" என்ற ஒன்று வேண்டாத ஒன்றாக ஆகிவிடும்.

இன்றைய மனிதன் சுமைகளுடன் கோவிலுக்குச் செல்கிறான்.

உள்ளே கொண்டுபோய் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு வெறுங்கையோடு வெளியே வருகிறான். இது ஒருவிதமான பக்தி.

ஒருவன் சொன்னான்; "நான் வெறுங்கையோடு கோவிலுக்குள் போனேன்... சுமையோடு திரும்பி வந்தேன்... என்னைப் பிடித்து சிறையில் பொலிஸார் அடைத்தனர்" என்றான்.

"என்ன சுமை அது?"

"கடவுள் சிலை"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## தொலைந்த சட்ட ஆவணங்களை பெறுவதற்கான நடமாடும் சேவை

(முல்லாவி)

தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப் பிரிவும் இணைந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான இறுதிக்கட்ட நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மு/சிலாவத்தை கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையானது முல்லைத்தீவு நகரப்பகுதி, முல்லைத்தீவு தெற்கு, சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, வண்ணான்குளம், செல்வபுரம், கோவிற்குடியிருப்பு, மணற்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால் மேற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு ஆகிய 12 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

இந்நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகம் ஆகியவற்றின் சான்றிதழ்கள், காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகள், தேசிய ஆள் அடையாள அட்டை விண்ணப்பங்கள், முதியோர் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் உட்பட தேசிய அடையாள அட்டை தொலைத்தவர்களுக்கான பொலிஸ் பதிவுஎன்பவற்றினை பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சான்றிதழ்களுக்கான முத்திரைக்கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது எனவும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பதில் பிரதேச செயலர் தி.திரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

(2-3-15)

## இசை, நடன பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் மற்றும் உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகம் என்பன இணைந்து இலங்கை இந்திய நட்புறவு அமைப்பின் அனுசரணையுடன் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை இசை, நடன பயிற்சிப் பட்டறைகளை நடத்தப்படவுள்ளதாக பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இம்மாதம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஸ்ரீமதி அமர்வேல் வள்ளியின் நடன பயிற்சிப்பட்டறை நடைபெறும்.

17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஸ்ரீ.பி.உன்னி கிருஸ்ணனின் வாய்ப்பாட்டு பயிற்சியும் மாலை 6.30 மணிக்கு சங்கிலியன் தோப்பில் ஸ்ரீமதி அலர்மேல் வள்ளியின் நடன நிகழ்வும் நடைபெறும்.

18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ரி.எம்.கிருஸ்ணாவின் பயிற்சியும் இசையரங்க நிகழ்வும் மாலை 6.30 மணிக்கு சங்கிலியன் தோப்பில் ஸ்ரீ.பி.உன்னிகிருஸ்ணனின் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளது. இவர்களினால் துறைசார் அரங்கப்பயன்பாடு, ஆற்றுகை நுணுக்கங்கள் மற்றும் நுட்பங்கள் தொடர்பான விளக்கங்கள் பயிற்சிப்பட்டறையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(2-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 80 |
| கரட் | 100 | 110 | 160 |
| பூசணி | 40 | 30 | 60 |
| புடோல் | 35 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 90 |
| பாகற்காய் | 80 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 100-150 | -- |
| பயற்றங்காய் | 30-40 | 30 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 70 | 140 |
| முருங்கைக்காய் | 50-80 | 140 | 100 |
| போஞ்சி | -- | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 60-70 | -- |
| கீரை – 1 பிடி | 8-10 | 15 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 18-20 |

## இராசி பலன்

09.08.2012

(ஆடி 25, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சப்தமி பிற்பகல் 12.36 மணிவரை

பரணி முழுவதும்

இராகுகாலம் 1.34-3.04 மணிவரை

சுபநேரம் 7.34-9.04 மணிவரை

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறை கேட்கும் நிலை ஏற்படலாம், பிரியமான சிலருக்காக செலவுகள் ஏற்படும் சூழ்நிலையுண்டு.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், பணவரவு எதிர்பார்த்தபடியே கிடைக்கும்.

**கடகம்** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு, சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** நேற்று குறையில் இருந்த பணியை மீதியும் செய்து முடிப்பீர்கள், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், பணவரவு திருப்தி தரும், ஆரோக்கியம் சீராகும்.

**தனுசு** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், புத்தி சாதுரியமாக செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் சேரும் நாள்.

**கும்பம்** உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் சமூகங்களுக்கான ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று யாழில் நடைபெறும்

## மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் சிவில் சமூகங்களுக்கான ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரி வித்துள்ளார். இது தொடர்பாக விளக்கமளிக் கும் வகையில் நேற்று முன்தினம் மாலை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை நடத்தப்படும் சிவில் சமூகங்க ளுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் தின் போது மூன்று உபகுழுக்களை அமை க்க மனிதவுரிமைகள் ஆணைக்குழு திட்ட மிட்டுள்ளது.

இதன்படி சிவில் சமூகங்களுக்கான உப குழு, நிபுணத்துவக்குழு (இந்தக் குழு ஆலோ சனைக்குழுவாக செயற்படவுள்ளது) மூன் றாவது குழுவாக அரச உத்தியோகத்தர்கள், பொலிஸாரை உள்ளடக்கியதாக திட்டங்களை முன்னெடுக்கும் குழு உருவாக்கப்படவுள் ளது. இந்தக்குழு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

அத்தோடு முதியோர்களின் உரிமைகள் தொடர்பிலும் இந்தக்கூட்டத்தில் கலந்துரை யாடப்படவுள்ளதோடு அடுத்தவாரமளவில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்ட கலந்துரையாடலில் என்னால் எடுத்துக் கூறப் படும் எனவும் இந்தக்கூட்டங்களில் கலந்து ரையாடப்படும் விடயங்கள் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்த சிவில் சமூகங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திற்கு அழை ப்பு விடப்படாதவர்கள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியா லயத்துடன் தொடர்புகொள்ளமுடியும் என வும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)




## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அருள் கல்வி வட்டத்தினால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரியில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் இருபாலாரும் பங்குகொள்ள முடியும்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 6 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாணவிகளுக்கு மட்டுமான கருத்தரங்கும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மாணவர்களு க்கு( ஆண்கள்) மட்டுமான கருதரங்கும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இருபாலா ருக்குமான கருத்தரங்கும் நடைபெறும்.

இம்மாதம் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பூநகரியில் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இரு பாலாருக்குமான கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கில் தமிழ், கணிதம், விஞ் ஞானம், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங் களே நடைபெறவுள்ளதாகவும் இவற்றிற்கான வினாவிடைப் புத்தகம், வினாக்கொத்துக் கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (ந-9)

## நெல்லியடி சந்தைப் பகுதியில் புதிதாக கொட்டகை நிர்மாணிக்கப்படும்

### பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை யின் நிதியுதவியுடன் வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 ஆம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பொ. வியாகேசு தெரிவித் துள்ளார்.

பிரதேச சபையின் நடப்பாண்டு வருமான நிதியின் மூலம் நெல்லியடி புதிய சந்தையில் 6 இலட்சத்து 18 ஆயிரத்து 664 ரூபா நிதி யில் கொட்டகை அமைத்தல், 7 இலட்சத்து 55 ஆயிரத்து 85 ரூபா நிதியில் கொம்மாந்துறை வீதி புனரமைத்தல் உட்பட காவின்கிராய், வெள்ளைவாய்க்கால் வீதி, அல்வாய் மனோ கரா வீதி, தம்பான் ஒழுங்கை, மணியகாரன் தோட்ட தெற்கு வீதி, உடுப்பிட்டி நெசவுசாலை வீதி, கலைமகள் சனசமூக வீதி, சிறிநாரதா வீதி போன்ற வீதிகள் கடந்த 2010 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மக்கள் பங்கேற்பு திட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீதிகளே புனரமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ந-3-15)

## நல்லூரில் 24 மணிநேர சேவையுடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற் சவ காலத்தில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் ஆலயத்தின் மேற்கு வீதியில் யாழ்.மாநகர சபையால் அமைத்துக் கொடுக் கப்பட்ட தற்காலிக முதலுதவி நிலையத்தில் 24 மணிநேரமும் 35 தொண்டர்கள் சுழற்சி அடி ப்படையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் அங்கு முழு நேரமும் அம்புல ன்ஸ்வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டு சேவையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது.எனவே, ஆலயச் சுற்றாடலில் வசிக்கும் மக்கள் 021 321 4444 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி அவ சர அம்புலன்ஸ் சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.இரவுநேர அம்புலன்ஸ் சேவையை பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொடர்ந்தும் மேற் கொண்டு வருகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நோயாளிகளு க்கு சிறந்த அம்புலன்ஸ் சேவையை வழங் கியமைக்காக சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தால் யாழ்.மாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-3)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான ஊடகப்பார்வை சரியாக அமையவேண்டும்

## ஊடக சந்திப்பில் யாழ். அரசஅதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செய் திகளை ஊடகங்கள் வெளியிடும் போது பாதிக் கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு மேலும் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் செய்திகளை வெளியிடவேண்டும் என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுவர் செயற்பாடுகள் தொடர்பான பத் திரிகையாளர் சந்திப்பு ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பத்தி ரிகைகளின் உதவி தேவை. பத்திரிகைகளின் ஊடாகவே பல தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலங்களாக சிறுவர் துஷ்பிரயோகம் மற் றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான செய்திகள் அதிகளவில் வெளியி டப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களிலும் சிறுவர் துஷ்பி ரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இருப்



பினும் அவை வெளிக்கொண்டு வரப்படவி ல்லை. ஆனால் தற்போது ஊடகங்கள் வாயி லாக செய்திகள் உடனுக்குடன் வெளிக்கொண்டு வரப்படுவதனாலேயே இவை அதிகளவில் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும் சிறுவர்களுக்கு எதிரான பாலி யல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையா னது சிறுவர்களின் பாதுகாப்புடன் தொடர் புடைய தொண்டு நிறுவனங்களின் நிதியுதவி யுடன் நடவடிக்கைகளினை மேற்கொண்டு வருகின்றது.

அத்தோடு சிறுவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதைத் தடுக்க அனைவரின தும் ஒத்துழைப்பு அவசியம்.

மேலும் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத் திற்குள்ளான சிறுவர்களின் எதிர்காலத்தி னைக் கருத்திற்கொண்டு அவர்கள் மேலும் பாதிப்புக்களை எதிர்கொள்ளாத வகையில் ஊடகங்கள் செய்தி வெளியிடவேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்ட சிறுவன் அல்லது சிறுமியின் பெயர், முகவரி, வயது என்பன வற்றினை பிரசுரிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செய் திகளுக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடு க்கும் ஊடகங்கள் அவற்றைத் தடுப்பதற் குரிய விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய செய் திகளையும் வெளியிட முன்வரவேண்டும்.

பெற்றோர்களின் பங்களிப்பு சிறுவர் துஷ் பிரயோகத்தினைக் கட்டுபபடுத்துவதில அதிக பங்குவகிக்கிறது.பெற்றோர்கள் விழிப்புணர் வுடன் நடக்குமிடத்து சிறுவர் துஷ்பிரயோக ங்களைக் கட்டுப்படுதத முடியும்.

பிள்ளைகள் தொடர்பில் பெறறோர் எச சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்க ளைப் பாதுகாக்கும் பொறுப்பு தம்மிடமே உள் ளது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை கட ந்த காலங்களைவிட தற்போது மிகவும் குறை ந்தளவிலேயே சிறுவர் துஷபிரயோகம் தொட ர்பான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

ஆனால் தகவல்கள் வெளியாகுவது விருத்தி யடைந்ததனாலும் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைக்கு தயாராகுவதனாலும் இவை அதிகளவில் இடம்பெறுவதாக காட்டப்படுகின்றன.

இவற்றைக்கட்டுப்படுத்த யாழ்.மாவட்ட செயலகம் ஊடாக விழிப்புணர்வுச் செய்திகள் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ளன.

அதனைப் பத்திரிகைகள் வெளியிட வேண் டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் மேலதிக அரசாங்க அதி பர் ரூபினி வரதலிங்கம் மற்றும் தேசிய சிறு வர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் உள்ளிட்டவர்களும் பங்குகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர். (ந -6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.பதவித் தீர்மானத்தை இடைநிறுத்தி வைக்க உத்தரவு

## கல்கிசை நீதிமன்று நேற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி 6 வருடத்திற்கு ஒருமுறை நியமிக்கப்பட வேண்டும் என அக்கட்சியின் மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கல்கிசை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தாக்கல் செய்த மனுவை நேற்று பரிசீலித்த கல்கிசை மாவட்ட நீதிபதி பிரியந்த பெனாண்டோ இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜூலை 19 ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழு கூட்டத்தில் ஐ.தே.க.தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் என எடுக்கப்பட்ட தீர்மானம் கட்சியின் யாப்புக்கு முரணானது என மைத்திரி குணரத்ன மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ந-2)

# கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மீது பிள்ளையான் கட்சியினர் தாக்குதல்!

மட்டக்களப்பில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த மகேந்திரலிங்கமும் அவரது ஆதரவாளர்களும் நேற்றுக் காலை ஆரையம்பதி செல்வாநகர் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தருமான பூ.பிரசாந்தனும் அவரது ஆதரவாளர்களும் குறித்த இடத்திற்கு வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மகேந்திரலிங்கத்தின் ஆதரவாளர்களைத் தாக்கினர்.

அத்துடன் அவர்கள் வைத்திருந்த துண்டுப் பிரசுரங்களையும் பறித்துச் சென்று விட்டதாகவும் குறித்த சம்பவம் நடைபெற்றவுடன் வேட்பாளரால் காத்தான்குடி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க குறித்த இடத்திற்கு காத்தான்குடி பொலிஸார் விரைந்து சென்று மேலும் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுத்துள்ளனர். தற்போது காத்தான்குடி பொலிஸார் சம்பந்தப்பட்ட இரு சாராரையும் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-2)

# அங்கு நின்ற சிறுவன் இங்கு வந்தது எப்படி?

## யாழ்.போதனாவில் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை பூங்காவில் காணாமற்போன ஐந்து வயதுச் சிறுவன் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளான்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாவற்குழி கிழக்கினைச் சேர்ந்த திலக்ஷன் (வயது 5) சிறுவனை சலப்பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவரது தாயார் அழைத்து வந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வந்த தாயார் கைக்குழந்தையுடன் வந்தமையால் குறித்த சிறுவனை யாழ்.போதனா வைத்தியசாலையின் பூங்காவில் விளையாட விட்டுவிட்டு ஐந்தாம் இலக்க மருத்துவ விடுதிக்கு சென்றுள்ளார்.

பரிசோதனை முடிவுற்று சிறுவனை அழைத்துப்போக வந்த தாய் தன் மகனை அங்கு காணாது திகைத்து நின்றுள்ளார்.

உடனே தன் மகனைக் காணவில்லை என்று யாழ்.போதனா வைத்தியசாலை பொலிஸ் பிரிவிலும் பாதுகாப்பு ஊழியர் பிரிவிலும் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து இருபகுதியினரும் வைத்தியசாலை முழுவதிலும் தேடுதல் நடத்தியும் காணாமற்போன சிறுவன் கிடைக்கவில்லை.

இதனையடுத்து வைத்தியசாலை பாதுகாப்பு மேற்பார்வையாளர் எஸ்.சதீஸ்குமார் தலைமையிலான குழு யாழ்.நகர் முழுவதிலும் தேடுதல் நடத்தி இறுதியாக யாழ்.பஸ் நிலையத்தில் குறித்த சிறுவன் அழுது கொண்டிருப்பதனை அவதானித்துள்ளனர்.

சிறுவனை தம்முடன் வருமாறு அவர்கள் அழைத்த போதும் அவர்களோடு செல்ல சிறுவன் மறுத்தமையால் குறித்த சிறுவனின் தாயார் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டு சிறுவனை ஒப்படைத்துள்ளனர்.

தனது மகனை காணாத தாய் பதறிப்போய் செய்வதறியாது நின்ற போது பாதுகாப்பு ஊழியர்களின் முயற்சியினால் சிறுவன் மீட்கப்பட்டு பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

எனினும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பூங்காவிற்கு பாதுகாவலர்கள் நியமிக்கப்படவில்லையா எனவும் அவ் இடத்தில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ந-4)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 222 1919
MOB:-0759751919
முதல் Km-60/-
அடுத்த ஒவ்வொரு Km-40/-
முச்சக்கர வண்டி/கார்/வான்
7 a.m-11p.m வரை 7 நாட்களும் சேவை
மலிவானதும் நம்பகமானதுமான சேவை
நட்புடன் உதவும் சாரதிகள்
36,கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 1919 , 075 975 1919
E.mail:-yarltaxi@gmail.com
(சி/727)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை 1<br>உயரம்:-5'6"<br>கி.பா:-56, 2 இல் செவ்<br>தொழில்:-கணக்காளர் (மாலைதீவு)<br>B/264 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கார்த்திகை 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:-48, 8 இல் செவ்<br>G/257 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 3<br>உயரம்:-6'1"<br>கி.பா:-8.5<br>தொழில்:-Bsc, நில அளவையாளர்<br>B/254 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'1"<br>கி.பா:-7.75<br>தொழில்:-பல் டாக்டர் (அவுஸ்திரேலியா P.R).<br>G/263 |
| பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 3<br>உயரம்:-5'5"<br>கி.பா:-49.25,12 இல் செவ்<br>தொழில்:-இ.மி.சபை உத்தியோகத்தர்<br>B/262 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம் 1<br>உயரம்: 5'4"<br>கி.பா:- 20.75<br>தொழில்:-B.S.M.S சித்த வைத்தியர்<br>G/268 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-22.75<br>தொழில்:-டுபாய்<br>B/261 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- விசாகம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா:-20.5<br>தொழில்:-MBBS<br>டாக்டர் (சுவிஸ் P.R)<br>G/266 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸின் இரட்டை வேடத்தை காவியுடை பயங்கரவாதம் அம்பலப்படுத்துகிறது

## ஹக்கீமின் கருத்துடன் ஹெல உறுமய மோதல்

(கொழும்பு)

காவியுடை பயங்கரவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியதை ஜாதிகஹெல உறுமய விமர்சித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் இரட்டைவேடத்தை அம்பலப்படுத்துவதாக ஜாதிகஹெல உறுமய கூறியுள்ளது.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்த ஜனாதிபதி அதேபோன்று சகல பயங்கரவாதங்களையும் அது காவியுடை பயங்கரவாதமாயினும் தோற்கடிப்பது வரவேற்கத்தக்கது என தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் இந்த பயங்கரவாதத்தால் வருந்துகின்றனர். இவர்களால் பள்ளிவாசல்களில் அமைதியாகத் தொழமுடியாது உள்ளது. இந்த ரம்ழான் மாதத்தில்கூட தொழுகைக்காக ஒன்று சேர பயப்படும் நிலைமையை அவர்கள் உருவாக்கியுள்ளனர் எனவும் அவர் கூறியிருந்தார்.

அமைச்சர் ஹக்கீமின் இந்தக்குற்றச்சாட்டு அவரின் இரட்டைவேடத்தையும் அவரது கட்சியின் கபடத்தனத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது என ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

கொழும்பில் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் ஹக்கீம் பேசும்போது பௌத்த பிக்குகளுக்கும் முஸ்லிம் பாரம்பரியத்துக்கும் இடையில் உள்ள பாரம்பரியமான நட்பைப் பற்றி பேசுவார். ஆனால், கிழக்கில் தமிழில் பேசும்போது அதே பௌத்த பிக்குகளை விமர்சிப்பார். கிழக்கில் பௌத்த பிக்குகளை விமர்சிக்கும்போது கொழும்பில் முஸ்லிம்களுக்காக நோன்பு திறக்கும் நிகழ்வுகளை பௌத்த பிக்குகள் ஒழுங்குசெய்வர் என உதயன்கம்மன்பில கூறினார். தேர்தல் வாக்குகளை பெறுவதற்காக இனக்குரோதத்தை தூண்டிவிடும் ஹக்கீம் முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் கிழக்குக்கு வெளியே வாழ்கின்றனர் என்பதை மறக்கக்கூடாது. இவரால் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் மோதவிடமுடியாது என்பதை ஜாதிகஹெல உறுமய நினைவுபடுத்த விரும்புகிறது. பௌத்த பிக்குகளுக்கு எதிராக கோபத்தையும் பயத்தையும் தோற்றுவித்து முஸ்லிம்களின் உணர்ச்சியை தூண்டிவிடுவதையே அவர் செய்ய முயல்கிறார் என்பது தெளிவாக தெரிகின்றது. இதனால்தான் அவர் பௌத்த பிக்குகளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒப்பிடுகின்றார் என கம்மன்பில கூறினார்.

இவ்விடயம் குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதனதேரர் பேசுகையில், தனது சொந்த சமயத்தைக்கூட முறையாக கடைப்பிடிக்காத அமைச்சர்தான் ரவூப் ஹக்கீம் எனக் கூறினார்.

யுத்தம் நடந்தபோது அவர் நோர்வே நாட்டவரையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஆதரித்தார். இனமோதல் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கமுடியும் என்பது அவரின் நிலைப்பாடாக இருந்தது. காவியுடை பயங்கரவாதம் உள்ளதென கூறும் அவர் அது எங்கே உள்ளது என்பதையும் கூறவேண்டும். அதன் பயங்கரவாத செயல்கள் எவை என்பதையும் விளக்கவேண்டும். எனவே, அவர் அர்த்தமில்லாத அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்காமல் தனது குற்றச் சாட்டுக்களை நிரூபிக்கவேண்டும் என அவர் கூறினார். (ந-2)

# உதவிப்பணம் பெறுவதில் முதியவர்களுக்கு சிக்கல்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தபாலகங்கள், உபதபாலகங்கள் யாவும் தற்போது இயங்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் இந்த உபதபால் நிலையங்களில் முன்னர் முதியோர்களுக்கு வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. தற்போது அந்நிலைமை இல்லை.

குறிப்பாக கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரிய தபாலகங்களுக்கு முதியவர்கள் குறித்த பணத்தை பெற சிரமப்பட்டு செல்ல வேண்டியுள்ளது.

எனவே, முதியோர்களின் நிலையைக் கருத்திற்கொண்டு அந்தந்த கிராமங்களில் உள்ள உபதபாலகங்களில் பணத்தை பெற்றுக்கொள்ள உரிய தரப்பினர் உதவுமாறு பாதிக்கப்பட்ட முதியவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3-254)

# தமிழக அகதிகள் தொடர்பில் அதிக கவனம் எடுத்துக்கொள்ளுங்கள்

## முகாம் அதிகாரிகளுக்கு உத்தரவு

தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதி முகாம்களில் அதிகாரிகளுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் தமிழகத்தின் தோட்டனூற்று முகாமில் உள்ள தாயும் இரண்டு மகன்களும் கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். ஏற்கனவே 6 வயது சிறுமி ஒருவரும் கடந்த மாதம் சடலமாக மீட்கப்பட்டார்.

இதற்கிடையில் அகதி முகாம்களில் உள்ள இலங்கையர்கள் அங்கிருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்கு தப்பிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவர்களுக்கான முறையான பாதுக்காப்பினை வழங்க வேண்டும் என்று முகாம் அதிகாரிகளுக்கு உயர் அதிகாரிகள் வலியுறுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

# புதையல் தோண்டச் சென்ற சிப்பாய் உள்ளிட்ட எழுவர் கைது

(கொழும்பு)

வெலிகந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புராதன இடமொன்றில் புதையல் தோண்டச் சென்ற ஏழு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றையதினம் அதிகாலை கைது செய்யப்பட்ட இவர்களில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் பூசாரி ஒருவரும் அடங்குகின்றனர்.

இராணுவ சிப்பாய் விடுமுறையில் சென்றுள்ள வேளையிலேயே இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்கள் குருநாகல், பொத்துஹெர, ஆனமடுவ, ஹோமாகம மற்றும் திம்புலாகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (ந-2)



இலங்கை வங்கி சுன்னாகக்கிளையின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஓய்வுபெற்ற வங்கியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மூத்த வங்கியாளர்களைப் படத்தில் காணலாம்.

# றிசாத் மீதான குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதாரங்கள் உள்ளன

## சட்டமா அதிபர் திணைக்களம் உறுதி

(மன்னார்)

மன்னார் நீதிமன்ற நீதிவானை அச்சுறுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக அமைச்சர் றிசாத் பதியுதீன் மீது வழக்குப் பதிவு செய்வதற்கான போதுமான ஆதாரங்கள் இருப்பதாக இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் உறுதி செய்துள்ளதாக கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு வழங்கிய அறிக்கையிலேயே றிசாத் பதியுதீன் மீது வழக்குப் பதிவு செய்வதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் ஆரம்பகட்ட அறிக்கையில் மன்னார் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது மற்றும் நீதவானை அச்சுறுத்தியது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக இலங்கை சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன. இதையடுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த சட்டவாளர்கள் இலங்கை பொலிஸார் அறிக்கையை ஆராய்ந்து வருவதாகவும் அடுத்த சில நாட்களில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ந-2)


## ஸ்ரீவிக்னேஸ்வரா முன்பள்ளிக்கு முன்பள்ளி ஆசிரியர் தேவை

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:-

☆ கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் O/L சித்தி

☆ முன்பள்ளி ஆசிரியையாக பணியாற்றிய அனுபவம் அல்லது முன்பள்ளி கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல்

☆ ஓரளவு ஆங்கில அறிவுடையவராயிருத்தல்

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20.08.2012 இற்கு முன்பதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

சுகதாசன் அன்புக்கரசி
விக்னேஸ்வரா வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தொ.பே.இல: 021 7911854
077 4249071

(187)


# ஹெரோயின் வர்த்தகர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவர் இரத்மலானை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வேளை சந்தேக நபர் வசமிருந்து 12 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்கென பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ந-2)


ST. JOHN AMBULANCE

## வைத்தியசாலை நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆட்சேர்ப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென் ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். நாள் ஒன்றிற்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு ரூபா 1 000/= வழங்கப்படும்.

இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 12.08.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சென் ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கான தொடர்பு இலக்கம்:- 021 3214444

24 மணி நேர அம்புலன்ஸ் சேவைக்கான இலக்கம்:- 021 3214444

சென் ஜோன் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம். (182)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் குறைந்த டீசல் பயன்பாட்டினால் இ.போ.சவிற்கு பாரிய நட்டம்

*குமார வெல்கம தெரிவிப்பு*

நாட்டில் தரம் குறைநத டீசல் பயன்பாட்டினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு 60 இலட்ச ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சுமார் 250 வாகனங்கள் தரம் குறைந்த டீசல் பயன்பாட்டினால் சேதமடைந்துள்ளதாக அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

பழுதடைந்த பேருந்துகளுக்கு டீசல்பில்டர்களை புதிதாக போட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பேருந்துகள் பழுதடைந்த காரணத்தினால் வழமையான போக்குவரத்து சேவைகளை நடத்த முடியவில்லை.

பழுதடைந்தமை மற்றும் சேவையில் ஈடுபடுத்த முடியாமை ஆகியவற்றினால் பாரியளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-9)

# பறந்த விமானத்தின் கழிப்பறையில் புகைப்பிடித்த இருவர் கைது

(கொழும்பு)

குவைத்தில் இருந்து இலங்கை நோக்கி பயணித்த யுஎல் 230 என்ற வானூர்தியின் கழிப்பறையில் புகைப்பிடித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குவைத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கொழும்பு நோக்கி வந்த வானூர்தியிலேயே இவர்கள் புகைப்பிடித்துள்ளனர். இதனையடுத்து வானூர்தியில் ஒரு வகை எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

இத்னை அவதானித்த வானூர்தி சேவையாளர்கள் வானூர்தியில் ஏதும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதா என ஆராய்ந்துள்ளனர்.

இருந்தபோதும் கழிப்பறையில் இருந்து வெளியான புகையால் அந்த எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டமை கண்டறியப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்ட இருவரிடமும் வானூர்தியில் புகைபிடிக்கக் கூடாதென வானூர்த்தி சேவையாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்போதுபுகைப்பிடித்தவர்கள் வானூர்தி ஊழியர்களுடன் முறுகலில் ஈடுபட்டதை அடுத்த பாதுகாப்பு அதிகாரிகள் அந்த இருவரையும் பிடித்து கட்டுநாயக்க வானூர்தி நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பிடிபட்டவர்கள் கிரிமெட்டியான மற்றும் உடதெனிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (2-9)

# அவசர அழைப்பு இலக்கத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம்

*பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள்*

போலியான தகவல்களை வழங்கி 119 என்ற அவசர அழைப்பு இலக்கத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என பொலிஸ் தலைமையகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவசர அழைப்பு இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி போலி தகவல்களை வழங்குவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கம்பஹா நீதிமன்றத்தில் குண்டுப் புரளியை ஏற்படுத்தும் வகையில் அவசர அழைப்புப் பிரிவுக்கு போலித் தகவல்களை வழங்கிய நபரை கண்டுபிடிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நபரின் தொலைபேசி இலக்கம் கண்டறியப்பட்டுள்ளதாக கூறிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அவருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கம்பஹா நீதிமன்ற கட்டடத் தொகுதிக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தும் நோக்கில் இந்தத் தகவல் வழங்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே 119 என்ற அவசர அழைப்பு இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை தவறாகப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# வவுனியா சிறுவர் பூங்கா மக்களுக்கு பயனுடையதாகவுள்ளது

*வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு*

வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்கா மக்களுக்கு பயனுள்ள விடயமாகவுள்ளதுடன் கிராம மட்ட அபிவிருத்திக்கான எடுத்துக்காட்டாகவுமுள்ளதென வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் எஸ். சந்திரகுமார் தெரிவித்தார்.

அது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கவனிப்பாரற்றுக் கிடந்த சிறுவர் பூங்காவை குடியிருப்பு கிராம அபிவிருத்திச்சங்கம் யுஎஸ்எயிட் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் சிறப்பாக நிர்மாணித்துள்ளது. இன்று வவுனியா நகரில் சிறுவர்களுக்கான, நகரவாசிகளுக்கான மன அழுத்தத்தை குறைப்பதாகவும் பொழுது போக்கு அம்சமாகவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள ஏனைய சிறுவர் பூங்காக்களும் இவ்வாறாக புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் குடியிருப்பு சிறுவர் பூங்காவின் சீரான செயற்பாடுகள் போன்று அமைய வேண்டுமெனவும் தெரிவித்தார். (ந-9-266)

# 2012.08 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1048-23 நாட்களே பதவியில் இருந்த பின்னர் திருத்தந்தை இரண்டாம் டமாசஸ் உயிரிழந்தார்.

★1173-பீசா சாயும் கோபுரத்தின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே முடிவுற்றது.

★1655- ஒலிவர் குரொம்வெல் பிரவு இங்கிலாந்தை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்.

★1842-ஐக்கிய அமெரிக்காவுக்கும் கனடாக்கும் இடையில் ரொக்கி மலைகளின் கிழக்குப் பகுதியில் எல்லைகளுக்கான உடன்பாடு எட்டப்பட்டது.

★1902-ஏழாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடிசூடினான்.

★1902-யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ரோமன் கத்தோலிக்க ஆலயம் ஒன்றும் பாடசாலை ஒன்றும் இந்துக்களால் தாக்கி அழிக்கப்பட்டன.

★1907-இங்கிலாந்தில் பிறௌன்சி தீவில் ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சாரணிய இயக்கத்தின் முதல் பாசறை முடிவடைந்தது.

★1942-வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் ஆரம்பித்ததற்காக மகாத்மாகாந்தி உட்பட பல இந்திய காங்கிரஸ் தலைவர்கள் மும்பாயில் கைது செய்யப்பட்டனர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நகரான நாகசாக்கியின் மீது ஐக்கிய அமெரிக்கா வீசிய கொழுத்த மனிதன் எனப் பெயரிடப்பட்ட அணுகுண்டு 70 ஆயிரம் முதல் 90 ஆயிரம் வரையான பொதுமக்களை அதே இடத்தில் கொன்றது.

★1965- சிங்கப்பூர் மலேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனி நாடாகியது.

★1965-ஆர்கன்சசில் டைட்டான் ஏவுகணைத் தளத்தில் இடம்பெற்ற தீவிபத்தில் 53 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

★1974- வாட்டர்கேட் ஊழல் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் பதவி விலகினார்.

★2006- திருகோணமலைப் பகுதியில் தமிழ் மக்கள் வெருகல் ஊடாக இடம் பெயர்ந்தபோது விமானத் தாக்குதலுக்குள்ளாகியும் எறிகணைத் தாக்குதலாலும் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்பு**

★1776-அமேடியோ அவகாதரோ, இத்தாலிய வேதியியலாளர் (பி.1856)

**இறப்புக்கள்**

★1962-ஹேர்மன் ஹெசே, நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (பி.1877)

★1969-செசில் பிராங்க் பவெல், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர் (பி.1903)

★2000- ஜோன் ஹர்சானி, நோபல் பரிசு பெற்ற ஹங்கேரிய பொருளியலாளர் (பி.1920)

## தோமஸ் அல்வா எடிசன்



தோமஸ்அல்வா எடிசன் ஒரு அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரும் தொழிலதிபருமஆவார். இவர் ஒளிவிளக்கு, ஒலிவரைவி, திரைப் படக் கருவி உள்ளிட்ட பல கருவிகளை உருவாக்கினார். திரள் உற்பத்தி, ஒன்றுபட்ட பெரிய குழுப்பணி ஆகிய கோட்பாடுகளைப் பயன்படுத்திய முதல் கண்டுபிடிப்பாளர் களுள் ஒருவர். 1880 இல் எடிசன் அறிவியல் சார்ந்த இதழ் ஒன்றைத் தொடங்கியவர். இது 1900 ஆம் ஆண்டில் அறிவியல் முன்னேற்றத்துக்கான அமெரிக்கக் கழகத்தின் (American Association For the Advancement of Science) இதழானது. தனது பெயரில் சாதனை அளவான 1093 கண்டுபிடிப்புக்களின் காப்புரிமைகளைப் பதிவு செய்த எடிசன் பெருமளவு கண்டுபிடிப்புக்களைச் செய்தவர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

தோமஸ் அல்வா எடிசன் 1847 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி ஓஹையோவில் உள்ள மிலான் என்னும் ஊரில் பிறந்தார். எடிசனின் பெற்றோர் நடுத்தர வகுப்பை சேர்ந்தவர்கள். தந்தை சாமுவேல் எடிசன் ஓர் அமெரிக்கர். தாயார் நான்சி எடிசன் ஸ்காட்டிஷ் பரம்பரையில் வந்த கனடா பெண். அவர் ஒரு பள்ளிக் கூட ஆசிரியை. இவர்களுக்கு எடிசன் ஏழாவதாகவும் கடைசியாகவும் பிறந்தார்.

தோமஸ் எடிசனுக்கு சிறு வயதிலேயே காது கேட்கும் திறன் பாதித்திருந்தது. அப்பிறவிப் பெருங்குறை அவரது பிற்கால நடையுடை பழக்கங்களை மிகவும் பாதித்ததோடு அநேகப் புதுப் படைப்புக்களுக்கும் காரணமாகவும் இருந்தது. 1840 இல் தந்தை சாமுவேல் எடிசன் மிலானில் ஒரு சாதாரண மர வியாபாரத்தைத் தொடங்கினார். பின்பு மிஸ் சிகன் போர்ட் ஹுரனில் கலங்கரை விளக்கக் காப்பாளராகவும் கிராடியட்,கோட்டை இராணுவத் தளத்தின் தச்சராகவும் சாமுவேல் வேலை பார்த்தார்.

தோமஸ் எடிசன் சிறு வயதில் ஸ்கார்லட் காய்ச்சலில் கஷ்டப்பட்டுத் தாமதமாக எட்டரை வயதில்தான் போர்ட் ஹுரன் பாடசாலைக்குச் சென்றார். மூன்று மாதங்களுக்குப் பின் ஒருநாள் மூளைக் கோளாறு உள்ளவன் என்று ஆசிரியர் திட்டியதால் அவரது பாடசாலைப் படிப்பு முடிந்தது. எனவே அவரின் தாயார் பாடசாலையிலிருந்து தோமசை விலக்கி விட்டுத் தானே அவருக்கு பாடங்கள் சொல்லிக் கொடுத்தார். பள்ளிக் கூட ஆசிரியரான தாயி டம் மூன்று ஆண்டுகள் வீட்டிலேயே எடிசன் கல்வி கற்றார். படித்தல், எழுதுதல் மற்றும் எண் கணிதப் பயிற்சியோடு பைபிளையும் பழங்கதைகளைப் படிக்குமாறு தோமசின் தந்தை சாமுவேல் ஊக்கப்படுத்தினார். கவிதைகளைப் படிப்பதிலும் பாடுவதிலும் அவருக்கு விருப்பம் அதிகமாயிருந்தது. நூலகத்திற்கு சென்று அவருக்கு தேவையான குறிப்புதவி நூலை அவரே எடுக்கக் கற்றுக்கொண்டபோது அவருக்கு வயது 11.

1860களின் தொடக்கத்தில் எடிசனுக்கு ரயில் நிலையத்தில் தந்தி இயக்கும் வேலை கிடைத்தது. அதிவேகத் தந்தி இயக்குதலுக்குப் பேர் பெற்றவர் தோமஸ். அவரது முதல் கண் பிடிப்புகள் மின்தந்தி போன்ற தந்தி தொடர்பான கருவிகளே. எடிசனுக்குப் பெயர் பெற்றுத் தந்த கருவி 1877 இல் அவர் ஆக்கிய ஒலிவரைவியே. அதன் பிறகே மென்லோ பூங்காவின் மேதை என்ற பட்டம் அவருக்கு வழங்கலாயிற்று.

1869 இல் தன் 22 ஆம் வயதில் இரட்டைத் தந்தி அடிப்புச் சாதனத்தைப் பதிவுக் கருவியுடன் இணைத்து இரண்டு செய்திகளை ஒரே சமயத்தில் ஒரே கம்பியில் அனுப்பிக் காட்டினார். அத்துடன் தந்தியின் மின் குறிகளைத் தானாக மாற்றிச் சொற்களாய்ப் பதிவு செய்யவும் அமைத்துக் காட்டினார். எடிசன் கண்டுபிடித்த முதல் மின் விளக்கு 1879 ஆம் ஆண்டு காட்சிப்படுத்தப்பட்டது. எடிசன் காலத்தில் வாயு விளக்குகள் தான் வீதிக் கம்பங்களில் பயன்படுத்தப்பட்டன.

நியூயோர்க் கீழ் மன்ஹாட்டனில் அமைந்த உலகின் முதல் வர்த்தக மத்திய மின்சார நிறுவனம் எடிசனின் நேரடிப் பார்வையில் நிறுவப்பட்டது. அது 1882 செப்டெம்பர் முதல் இயங்க ஆரம்பித்தது. பின்னர் மின்விளக்கு அமைப்பு வளர்ச்சி அடைந்து பின் பெரிய உணவுப் விடுதிகள், அரங்க மேடைகள், வாணிபத் துறைகள், கடைகள் என அனைத்து இடங்களிலும் மின் குமிழி ஒளி வீச ஆக்கமேதை எடிசனின் புகழ் உலகெங்கும் பரவியது.

ஆக்கமேதை எடிசன் தன் 84 ஆவது வயதில் 1931 ஒக்டோபர் 18 ஆம் திகதி நியூயேர்சியில் உள்ள வெஸ்ட் ஆரஞ்ச் நகரில் காலமானார். அமெரிக்க ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவர் எடிசனின் உடல் அடக்கத்தின் போது அமெரிக்காவெங்கும் மின் விளக்குகளை ஒரு நிமிடம் அணைக்கும் படி ஆணையிட்டிருந்தார். ஒக்டோபர் 21 ஆம் திகதி மாலை 9.59 மணிக்கு அவரது உடல் அடக்கமானது. ஒக்டோபர்21 ஆம் திகதி மாலை நியூயோர்க்கில் சுதந்திர தேவி சிலையின் (State of Liberty) கையில் இருந்த தீப்பந்தம் ஒளி இழந்தது. பிராட்வே விளக்குகள் வீதியில் பயணப் போக்கு விளக்குகளைத் தவிர மற்றைய அனைத்து விளக்குகளும் ஒளியிழந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமந்தை- காங்கேசன்துறை ரயில் பாதை பணிகள் 2014 ஆம் ஆண்டில் முடிவடையும்

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

ஓமந்தை முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையின் மீள் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் முடிவடையும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இறுதியான அமைதி மற்றும் உறுதிப் பாட்டை நோக்கி என்ற தொனிப் பொருளில் நேற்று நடைபெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடை பெறும் இந்த சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கில் 43 நாடுளின் இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த 200 முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

# கடமை தவறிய பொலிஸார் உடனடியாக பணி நீக்கம்

## மதுபோதையில் இருந்தனராம்

கடமை நேரத்தில் மதுபோதையில் இருந்த மற்றும் கடமையை செய்யத் தவறிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐவர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி இரவு மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோர் நடமாடும் பணியில் அமர்த்தப்பட்டனர்.

இவர்கள் மதுபோதையில் இருப்பதாக அநுராதபுரம் பொலிஸ் அதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து பதில் பொலிஸ் அதிகாரி ஒருவரை அவ்விடத்திற்கு அனுப்பி சோதனை செய்த போது இரு கான்ஸ்டபிள்கள் மது போதையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அவர்கள் நால்வரும் மிஹிந்தலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு இரவு பணியில் இருந்து உப பொலிஸ் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக மது போதையில் இருந்த இரு பொலிஸ் கான்டபிள்களும் பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியில் சென்றுள்ளனர்.

இதனையடுத்து உப பொலிஸ் பரிசோதகர் இரவு நடமாடும் சேவைக்கு பொறுப்பான பொலிஸ் சார்ஜன், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ் ஐவர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ந-2)

# கான்ஸ்டபிளின் காதை கடித்து துப்பியவர் கைது

(கொழும்பு)

பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் காது பிறிதொரு நபரால் கடித்து காயப் படுத்தப்பட்டுள்ளது.

பலாங்கொடை நகர பஸ் தரிப்பிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பேருந்து தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளை நோக்கிப் பாய்ந்த ஒருவர் அவரது காதை கடித்து அதில் ஒரு துண்டை அகற்றி எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

காயமடைந்த கான்ஸ்டபிள் பலாங்கொட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். (ந-2)

# கச்சதீவை மீட்க மீனவர்களுடன் களமிறங்குகிறார் கப்டன்

## துணிந்து மீட்பேன் எனவும் சபதம்



தமிழகத்தில் ஆளும் கட்சிக்கு அச்சப்படாமல் தம்முடன் மீனவர்கள் ஒன்று சேர்ந்து வந்தால் கச்சதீவை மீட்க கடலில் இறங்கி போராடத் தயாராக இருப்பதாக தேசிய முற்போக்கு திராவிடக் கழக தலைவர் விஜயகாந்த் (கப்டன்) தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. கட்சி சார்பில் இராமநாதபுரம் அரண்மனை முன்பாக நடைபெற்ற வறுமை ஒழிப்பு தின விழாவில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் போர் முடிவுற்ற பின்னர் இன்றுவரை அந்நாட்டு கடற்படையின் அட்டூழியத்துக்கு அளவே இல்லாமல் போய் விட்டது. முதல்வர் பிரதமருக்கும், பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கும் கடிதம் எழுதத்தான் செய்கிறார்களே தவிர இலங்கை இராணுவத்தின் அத்துமீறல்களை தடுக்க முடியவில்லை.

கச்சதீவை மீட்டால்தான் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும். கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை மீறிக் கொண்டிருப்பதை மத்திய அரசு தட்டிக் கேட்கவே இல்லை.

மீனவர்கள் என்னுடன் ஒற்றுமையாகவும் ஆளும் கட்சிக்கு பயப்படாமலும் வந்தால் கச்சதீவை மீட்கும் வரை போராடி அதனைத் திரும்பப் பெற்றுத்தர முடியும்.

ஆளும் கட்சிக்கு பயப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள். என்னை கைது செய்யப் பார்க்கிறார்கள். என் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால் நான் யாருக்கும் பயப்படமாட்டேன். எந்த வழக்கையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் சிறையில் இருக்கத் தயாராக இருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். மக்களை ஏமாற்றாமல் ஆட்சி செய்ததால்தான் தொடர்ந்து 11 ஆண்டுகள் முதல்வராக இருக்க முடிந்தது. கருணாநிதியும் ஜெயலலிதாவும் மக்களை ஏமாற்றியதால்தான் தொடர்ந்து ஆட்சிக்கு வர முடியவில்லை.

தே.மு.தி.க.தொண்டர்களின் கடுமையான உழைப்பால்தான் இன்று அ.தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது என்பதை அ.தி.மு.க. மறந்து விடக் கூடாது. அ.தி.மு.க. அரசு பழி தீர்க்கும் எண்ணத்தில் செயற்படாமல் மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்றார். (ந-2)

# சீனாவிடமிருந்து பேருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி

## குமார வெல்கம தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிடம் இருந்து பேருந்துகளை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக சீனாவிடம் பேருந்து இறக்குமதி செய்யப்போவதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கலந்தாலோசிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது இலங்கையின் பேருந்து சந்தையில் இந்தியாவின் அசோக் லேலன்ட் நிறுவனமே ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. சீனாவின் மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்த நிலை யில் முதல் முறையாக சீனப் பேருந்துகளை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தற்போது வழங்கப்படும் இந்தியாவின் அசோக் லேலன்ட் நிறுவனம் பேருந்துகளை கடனுக்கு வழங்குவதில்லை. ஆனால் சீன நிறுவனம் கடனுக்கு பேருந்துகளை வழங்கத் தயாராக உள்ளது. எப்போதும் ஒரே பேருந்து உற்பத்தி நிறுவனத்தைச் சார்ந்து இருப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

விரைவில் கொழும்பு நகரில் இரண்டு இரட்டை அடுக்குப் பேருந்துகளை இயக்கவுள்ளன. இத்திட்டம் வெற்றி பெற்றால் மேலும் பல பேருந்துகள் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (2-9)



வவுனியா மடுகந்தை ஸ்ரீ தலதா விகாரை நடத்திய ஸ்ரீ தலதா [illegible] பெற்றது. இந்நிகழ்வில் புனித சின்னம் யானை மீது வைத்து கொண்டு செல்லப்படுவதையும் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசாரங்களை [illegible] காணலாம். (படங்கள் :- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

03

## இலங்கையின் ஆதிக்குடிகளும் ஆரம்பக் குடியேற்றங்களும்



செங்கை ஆழியான்

### இயக்கர்கள்

...அருவியாற்றுக்கும் மகாவலி கங்கைக்கும் தெற்கே இவர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. 'இவர்கள் மூன்று யொஜனா தூரம் நீளமும் அகலுமும் கொண்ட மகா நாகா (மஹியங்கனை) தோட்டத்தில் சடங்கு ஒன்றுக்காகக் கூடுவர் என மஹாவம்சம் குறிப்பிடுகிறது. விஜயனின் வருகையின்போது அவன் சந்தித்த இயக்கரைச் சேர்ந்த இராணி குவேனி பற்றிய தகவல்கள் மஹாவம்சத்தில் உள்ளன. விஜயன்-குவேனி கதை ஒரு கட்டுக்கதை என்றாலும் சிங்கள மூதாதையினரின் வருகையின்போது இலங்கையில் இயக்கர்களின் ஆட்சி நிலவியது என்ற உண்மை மறுப்பதற்கில்லை. 'இயக்கர்களின் ஒரு புகழ் பெற்ற நகரமாக



திசமகாராம தமிழ்ப்பிராமி கல்வெட்டு-ஈழம்

சிறிஸ்தவஸ்து விளங்கியது.'[22] எனினும் 'இராமாயண காவியம், தொலமியின் தேசப்படம், ஜாதகக் கதைகள் என்பவற்றிலிருந்து இயக்கர்கள் வாழ்ந்த பிரதேசங்களாக திரிகூடம், இலங்காபுரி, அரித்தகிரி, யக்குரலை, லக்கல, நிகும்பிலாவனம், தூமரமக்க, விந்தனை, மஹியங்கனை சிறிஸ்தவஸ்து, யக்குரே என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.[23]' இவற்றோடு பொம்பரிப்பு, தாமிர பரணி(நகரம்), கதிர்காமம் என்பவற்றையும் இயக்கர் குடியிருப்புக்களாகக் கொள்ளலாம். வடக்கேயுள்ள இயக்கச்சி என்னும் இடத்தையும் இயக்கர் குடியுருப்பாகக் கருதவிடமுண்டு.

### 1.3.2 நாகர்

பண்டைய காலத்தில் இலங்கைத் தீவு முழுவதும் நாகர் இனமக்கள் பரவி வாழ்ந்துள்ளனராயினும், சிறப்பாக நாகதீவு என வரையறுக் கப்பட்ட வடபகுதியில் செறிந்து வாழ்ந்துள்ளனர். நாகதீவு என்ற பெயரை இப்பிரதேசம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் இப்பிரதேசத்தின் பண்டைக் குடிமக்களாக வாழ்ந்திருந்த நாகர்களேயாவார்.



தமிழ் பிராமி நடுகல்,
இறந்தவரை நினைவுகூறுவதற்காக நடப்பட்டது-கி.மு 1ஆம் நூற்றாண்டு
(தமிழகம்)

இலங்கை வரலாற்றின் செய்திகளை அறிவிக்கும் பனுவலாகக் கருதப்படும் மஹாவம்சம், கௌதம புத்தர் இலங்கைக்கு இரண்டாவது தடவை விஜயம் செய்தபோது, நாகதீவிலிறங்கி, இரண்டு நாக அரசர்களின் பிணக்கைத் தீர்த்து வைத்தார் எனக்கூறுகிறது.



வல்லிபுரம் பொற்சாசனம்
(வசபா-பொற்றகடு-ஈழம்)

மகோதரன், குலோதரன் என்ற இரண்டு நாக மன்னர்கள் ஓர் இரத்தினக் கம்பளத்திற்காகச் சண்டையிட்டனர். மகோதரன் நாகதீவின் அரசனாகவும் அவனது மருமகனான குலோதரன் கந்தமாதனத்தின் அரசனாகவும் விளங்கினார். இவ்விரு நாக அரசர்களும் தத்தமது படைகளுடன் மோதியபோது புத்தர் அவர்களைச் சமாதானப்படுத்தி வைத்தார். அவரது போதனையால் மனம்மாறிய நாக அரசர்கள் இரத்தினச் சிம்மாசனத்தைப் புத்தருக்கே வழங்கிவிட்டனர்.[24] நாக மன்னர்களின் இச் சர்ச்சை பற்றி மணி மேகலைக் காவியமும் குறிப்பிட்டுள்ளது.[25] நாகதீவிற்குத் தெற்கே இன்றைய களனி (கல்யாணி) கங்கைக் கரையோரத்தில் அமைந்திருந்த கல்யாணி இராச்சியத்தினைப் பற்றியும் மஹாவம்சத்தில் குறிப்புள்ளது. கல்யாணி இராச்சியத்தின் அரசனான மணியக்கியன் என்பவன் புத்தரின் போதனைகளை ஏற்றுப் பௌத்தத்தைத் தழுவிக் கொண்டான்.[26] இலங்கையில் அகப்பட்ட குறுநாகன், பூநாகன் ஆகிய பிரா

தென்கிழக்கில் நாகதுமை, நயினா தீவு எனும் மணிபல்லவம் மதவாச்சி எனும் மகாவில்லாச்சி, காங்கேசந்துறை எனும் ஜம்புக்கோளம், வல்லிபுரப்பகுதி, நாகர் கோவில், குருந்தன் குளம், மிகிந்தலைப்பகுதி, நாக சதுக்கம், கந்தரோடை எனும் கதிரமலை, கரியாலை நாகபடுவான் மகா தீர்த்தம் (மாந்தை) முதலானவை நாகர் குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன.[27] இந்த ஆதிக் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தந்தைவழிச் சமூக அமைப்பின் வழிமுறைப்படி ஒவ்வொரு தலைவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தான்.[28] கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாகியான் என்ற நாடுகாண் பயணி, இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றித் தனது நூலில் எழுதியுள்ளார். அவரின்படி இந்தத் தீவில் ஆதியில் தேவர்களும் நாகர்களும் இருந்தார்கள் என்றும் அவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளுடன் வர்த்தகம் நடாத்தி வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[29] வர்த்தகம் நடாத்தக் கூடியளவிற்கு நாகர்கள் கலாசார மேம்பாடுடையவர்களாக விளங்கியுள்ளனர்.

சிங்கள வரலாற்றாசிரியர்கள் நாகர்களை மனிதர்களாக ஏற்கத் தயாராகவில்லை. மஹாவம்சம் குறிப்பிடுகின்ற இயக்கர், நாகர் என்போர் மனித




இத்தீவின் மூதாதையினரை அமானுஸ்யர்கள் என வலியுறுத்தினார் போலும்.

### 1.3.3 திராவிடர்:

சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் மூதாதையர் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளைப் பேசினாற்போல தெரிகிறது. இவற்றுட் தமிழோடு சிங்களத்தின் மூதாதை மொழியாகிய எலுவும் காணப்பட்டது எனலாம். இந்த எலு மொழி பௌத்தம் வந்தபோது அதன் சமய மொழியாகிய பிராகிருதமாகிய பாளியுடன் கலந்தபோதே இன்றைய சிங்களமொழி உருவாகியது.[33] அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த தொல்பொருட் சான்றுகள் இலங்கையில் விஜயனுக்கு முன் வாழ்ந்தவர்கள் திராவிட மக்களாக இருந்திருக்க வேண்டும் என கருத வைக்கிறது.

இலங்கைத்தீவின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதியாகும். ஆதிக் குடிகள் இவர்களாயின் இவர்கள் திராவிடர் என்பதை நிரூபிக்கும் சான்றுகளாக பின்வருவன உள்ளன.

1. ஈமச்சின்னங்கள்
2. ஆதிப்பிராமிச்சாசனங்கள்
3. ஆதி மக்களது சமய வழிபாடுகள்

1.இலங்கையின் ஆதிக்குடிகளுக்குரிய கலாச்சாரம் பெருங்கற்

மிக்கல் வெட்டுக்கள் இலங்கையில் நாகர் குடியிருப்புக்கள் இருந்தமையை நிரூபிக்கின்றார் செ.கிருஸ்ணராசா.'[26] மஹாவம்சம் கூறுகின்ற இச்செய்தி களிலிருந்து இலங்கையில் நாக மக்கள் எனப்படுவோர் வாழ்ந்துள்ளரென அறியமுடிகின்றது.

கிடைக்கக் கூடிய இலக்கிய, பண்டை தேசப்பட (தொலமி) ஆதாரங்களிலிருந்து இலங்கையின் பல பகுதிகளிலும் நாகர் குடியிருப்புக்கள் இருந்துள்ளனவென அறிய முடிகின்றது. தேவிநுவரை, நாகர் கோயில், திருக்கோயில், நனிகிரி,

வர்க்கத்தைக் குறிப்பிடவில்லை என மெண்டிசும்[30] மஹாவம்சத்திலும் மணிமேகலையிலும் நாகர் ஒருபோதும் மனிதவர்க்கமாகக் காட்டப்படவில்லை எனப் பரணவிதானவும்[31] கூறியுள்ளார். இவை நகைப்புக்குரிய அவதானிப்புகளாகும். இயக்கர்களும் நாகர்களும் மனிதர்களாக ஆதியில் இலங்கையில் வாழ்ந்தார்கள் என்று கூறுவதில் தவறில்லை என்கிறார் வரலாற்றாய்வாளர் செ.குணசிங்கம்.[32] சிங்ஹள விஜயனின் வருகையுடன்தான் இலங்கையில் குடியேற்றங்கள் ஆரம்பமாகின என்பதை வலியுறுத்துவதற்காக

காலக் கலாச்சாரம் எனத் தொல்லியலாளர் இனங்கண்டுள்ளனர். இறந்தோரை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களைப் புதைத்ததால் இது இவ்வாறு பெயர் பெற்றது. இம்மக்கள் பயன்படுத்திய ஈமச் சின்னங்கள் பலவகைப்பட்டன. கல்லறைகள், கல் பட்டங்கள், கல் மேசைகள், நடுகற்கள், போன்றவற்றோடு எவ்வித ஈமச்சின்னங்களுமின்றி அடக்கம் செய்தல் போன்றவை அவற்றுட் சிலவாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு வலய மட்ட வணிக போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய மட்ட வணிகப் போட்டிகள் அண்மையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டி முடிவுகளை வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**வினாடி வினா**

**தரம் 10**

நெ.நிதீசன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), த.மதுரா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சு.கோகிலன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

**தரம் 11**

வி.டிலக்சனா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), பா.சுகன்ஜா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), பு.சாகீத்தியா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்)

**தரம் 12, 13**

ப.துசானி (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ஜெ.லூர்பிற்றா லிதர்சினி (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), யூ.விசாலினி (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

**தரம் 10**

த.பிறிடோ (பண்டாரிகுளம் விபுலானந் தாக்கல்லூரி), க.வைஸ்ணவி (இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம்), கு.புரட்சிகா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**தரம் 11**

ஜெனித்தா ஜெனோர்வா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), என்.எம்.அப்ராஸ் (வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்), ச.கம்சா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**தரம் 12, 13**

அ.உசா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), பா.சிவதர்சிகா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), எச்.எப். றசதா (வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்)

**பேச்சுப்போட்டி**

**தரம் 10**

சி.பவதாரணி (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), க.வைஸ்ணவி (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), எஸ். ரில்வான் (வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்)

**தரம் 11**

சூ.கவின்மொழி (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), பி.கேம்குமார் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), யோ. நிரோசா (தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம்)

**தரம் 12, 13**

என்.சுகன்ஜா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ப.லிர்சிகா (இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சி.சுரேகா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

(2-9-266)

# நேர்முகப்பரீட்சை இடம்பெறவில்லை

## விண்ணப்பதாரிகள் விசனம்

(பூந்தோட்டம்)

அகில இலங்கை ரீதியில் அபிவிருத்தி திணைக்களத்தினால் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரியிருந்த நிலையில் அதற்கு விண்ணப்பித்த வடக்கைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு இதுவரை நேர்முகத்தேர்வுக்கு அழைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரியிருந்த நிலையில் அகில இலங்கை ரீதியில் பலர் விண்ணப்பித்த போதிலும் வட பகுதியை சேர்ந்தவர்களை தவிர ஏனையோருக்கு நேர்முகப் பரீட்சை இடம்பெற்றுள்ளதாகவும் அதனூடாக பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த விண்ணப்பதாரிகள் வட பகுதிக்கு ஏனைய மாவட்டங்களில் இருந்து விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

(ந-9-266)

# ஐ.தே.க.உறுப்பினர்கள் இருவர் சுயாதீனமாக இயங்கத்தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளனர்.

அண்மைக்காலமாக ஆளும் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட உறுப்பினர்களே இவ்வாறு சுயாதீனமாக இயங்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்குவது குறித்து அறிவிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதனை விடவும் சுயாதீனமாக இயங்குவது ஆளும் கட்சிக்கு பலம் சேர்க்கும் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இதன் காரணமாக குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சில சலுகைகளை ஆளும் கட்சி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்தால் கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-2)

### நாடாளுமன்ற உறுப்பினரை அச்சுறுத்தியதாக

# மன்னார் நீதவான் மீது சபாநாயகர் குற்றச்சாட்டு

மன்னார் நீதவான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதங்களை மீறிச் செயற்பட்டுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றில் ஆற்றும் உரை தொடர்பில் வெளிநபர்கள் அச்சுறுத்தல் விடுக்க முடியாது.

மன்னார் நீதவான் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசெய்ன் பாரூக்கை அச்சுறுத்தியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீ நாடாளுமன்றில் என்னைப் பற்றி பேசினாய் அல்லவா. போராட்டத்தில் நீ கலந்து கொண்டாய் அல்லவா என மன்னார் நீதவான் தம்மை அச்சுறுத்தியதாக ஹுசெய்ன் பாரூக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 78 நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில் இதனை வரப்பிரசாத பிரச்சினையாக கருதப்பட முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

வரப்பிரசாத பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அதற்காகக் குரல் கொடுக்க தயார். எனினும் இது வரப்பிரசாத பிரச்சினையா அல்லது நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகித்த சந்தர்ப்பமா என ரணில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும் 78 நிலையியற் கட்டளை இதற்கு பொருந்தாது எனவும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கௌரவத்தை பாதுகாக்க வேண்டியது தமது பொறுப்பு எனவும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றில் ஆற்றிய உரை தொடர்பில் எவராலும் கேள்வி எழுப்ப முடியாது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# தொடர்கிறது அவுஸ்.போராட்டம்; நேற்று மட்டும் 93 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் 25 பேர் பேருவளையில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவத்தையின் நில்கோவாடியா பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆள்கடத்தல் கும்பலின் தலைவர் என கூறப்படுகின்ற பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் மொறட்டுவ பகுதியை சேர்ந்தவர் என அறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். இதேவேளை, காலி மாவட்டத்தின் கரையோரப் பகுதியான கொஸ்கொட பகுதியில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் 68 பேர் நேற்றைய தினம் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 பெண்களும் 3 சிறுவர்களும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ந-2)

# துரித கற்றல் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள தமிழ், புவியியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் இடை நிலைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துரித கற்றல் செயற்றிட்டம் தொடர்பாக (ALP) செயலமர்வு நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ், புவியியல் பாடங்களுக்கான செயலமர்வும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆங்கில பாடத்திற்கான செயலமர்வும் காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் பாடசாலை அதிபர்கள் இதனை கவனத்தில் எடுத்து ஆசிரியர்கள் உரிய திகதிகளில் நடைபெறுகின்ற செயலமர்வுகளில் பங்குபெறுவதற்கு ஆவன செய்யுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

(ந-3-15)



யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தினதும் விவசாய நிறுவனத்தினதும் 26 ஆவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 38 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆளுநர் சபை செயலாளர் அருட்கலாநிதி எஸ்.சி.ஆனல்ட், ஆளுநர் சபை உப தலைவர், பொறியியலாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் ஆகியோர் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் என்.ஆர்.ஜி.ஹீம், விவசாய நிறுவன அதிபர் திருமதி ஏ.வி.எமில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகம், விரிவுரையாளர் சாமுவேல் அன்பழகன் அரியதுரை ஆகியோர் உரையாற்றுவதையும் கொழும்பு லேடி றிட்ஜ்வே மருத்துவமனை கலாநிதி யூலியட் சில்வந்தி அரியதுரை மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் ஆசீர்வாதத்துடன்தான் பிக்கு பிள்ளையாரை உடைத்தெடுத்தார்

## ஆதிக்க வெறியாட்டம் அதிகரித்துவிட்டது-மாவை



அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் பௌத்த பிக்குகள் நடத்தும் அடாவடித்தனத் தைக் கட்டுப்படுத்த தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

பௌத்த ஒற்றையாட்சி நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அரசு சதி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதன் ஆரம்பமாகவே தமிழ் முஸ்லிம் சமூகங்களை இலக்காகக் கொண்டு அரசு நயவஞ்சக செயற்பாடுகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இத்தகைய அரசின் சதிநடவடிக்கைகளை தடுத்து நிறுத்த தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பேரினவாத, மதவாத அடாவடித்தனங்களை சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக கட்டவிழ்த்து விட்டுள்ள அரசாங்கம் அதற்கான தூண்டுதல்களையும் மேற்கொண்டு வருகின்றது.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைகள் அமைச்சர்களாக அரசாங்கத்தினால் அங்கம் வகித்து கொண்டிருக்கும் போது அரசின் இலக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மீது ஒரே வகையாகவே உள்ளது.

இந்து ஆலயங்கள் மீது பௌத்த பேரினவாதம் முன்னெடுத்து வரும் அடாவடித்தனங்கள் இன்று முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பௌத்த பிக்குகள் முன்னின்று நடத்தும் இவ் அடாவடித்தனங்களுக்கு அரசின் ஆசீர்வாதமும் மறைமுகமாக கிடைத்து வருகின்றது.

இத் தொடரின் அடிப்படையிலேயே பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் பாணமை பிள்ளையார் ஆலய விக்கிரகமும் உடைத்தெடுக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கெதிராக இடம்பெற்று வரும் பேரினவாத, மதவாத, அடாவடித்தனங்கள் போன்று உலகில் வேறு எங்கும் இடம்பெறவில்லை. தமிழ், முஸ்லிம் மக்கள் இந்நாட்டில் அடையாளமுள்ள சமூகங்கள் இல்லையென காட்ட முனையும் அரசின் நடவடிக்கை உச்ச நிலைக்குச் சென்றுள்ளது.

ஆதிக்க வெறியாட்டம் மூலம் நாட்டை பௌத்த, சிங்கள ஒற்றையாட்சி நாடாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒற்றையாட்சி ஆதிக்கம் பௌத்த இனவாதம் மூலம் இலங்கை முழுவதும் சர்வாதிகார முடிசூடா மன்னன் ஆட்சி முறைமைக்கு இட்டுச் செல்லும் நிலைமை உருவாகியுள்ளது. இதன் காரணமாகவே சிறுபான்மையின மக்களின் மதச்சுதந்திரம் பறிக்கப்பட்டு வருகிறது.

வடகிழக்கில் தங்களை தாங்களே ஆளும் உரிமை பெற்று வாழ வேண்டுமென்ற இலட்சியம் கொண்ட தமிழ் மக்கள் அரசுக்கெதிராக வாக்களித்து தமது அரசியல் உரிமையை வென்றெடுக்க முன்வர வேண்டும். ஆகவே, சிறுபான்மையினரான நாம் அனைவரும் இன, மத வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு அரசின் சதி நடவடிக்கைகளை முறியடிக்க போராட வேண்டும்.

முஸ்லிம் தமிழர்களுக்கெதிரானவர்கள் எனக் காட்ட முனையக் கூடாது. தமிழர்களுக்கெதிராகவும் அவர்களின் அபிலாஷைகளுக்கு எதிராகவும் முஸ்லிம் காங்கிரஸ் செயற்படக் கூடாது எனவும் குரல் கொடுத்தனர்.

உணர் பூர்வமாக முஸ்லிம்களிடையே எழுந்த அப் பூகம்பத்தின் விளைவாகவே கிழக்குத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட நேரிட்டது. முஸ்லிம் மக்களின் இத்தகைய உணர்ச்சிபூர்வமான எழுச்சியை தமிழர் தரப்பும் பின்பற்ற வேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்பும் தமிழ், முஸ்லிம் மக்கள் அதே உணர்வோடு ஒன்றிணைய வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலை எதிர்காலத்தில் உருவாகும் போது இனப்பிரச்சினை தீர்விலும் சுமுகமான தீர்வினை எங்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். நம் தாயகத்தில் நமது உரிமையை நிலை நாட்டுவதற்கான சந்தர்ப்பமாக கிழக்குத் தேர்தலை பயன்படுத்துவோம்.

இத்தேர்தலில் அரசாங்கம் தனது முழுப் பலத்தையும் படைப்பலத்தையும் தன் கூலிப் படைகளையும் பயன்படுத்தி வெற்றியடைய முயற்சிக்கும் அதேவேளை இறுதி நேரத்தில் வாக்களிக்கச் செல்லாமல் தடுக்கும் உபாயங்களையும் கையாளும்.

வாக்களிப்பு வீதத்தையும் நாம் அதிகரித்துக் கொள்ள வேண்டும். இவ்விடயம் தொடர்பாக வாக்காளர்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும். எமது நில ஆக்கிரமிப்புக்காகவும் வாழ்வுரிமைக்காகவும் சாத்வீகப் போராட்டங்களையும் மாநாடுகளையும் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தோம்.

இதற்கிடையில் தேர்தல் குறுக்கே வந்துவிட்டது. இந்நாட்டில் ஒரே தேர்தல் மயம் தான். தேர்தலுக்காக கோடிக்கணக்கான ரூபா செலவிடப்படுகிறது. இவை அனைத்தும் மக்களின் பணமாகும். மக்களின் பணத்தை அரசு செலவிடுகிறது.

இவற்றுக்கெல்லாம் ஆப்புவைக்க நாம் அனைவரும் ஒன்றுபடுவோம். கிழக்குத் தேர்தல் மூலம் எமது எதிர்ப்பை வெளிக்காட்டுவோம் எனவும் தெரிவித்தார். (ந-2)

# துணுக்காய்ப்பகுதி மக்கள் குடிநீரைத்தேடிப் போராட்டம்

## வரட்சியால் பெரிதும் பாதிப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் குடிநீர் தேடி அலைந்து திரிகின்றனர்.

ஆலங்குளம், மங்கைநகர், அனிஞ்சியன் குளம், கல்விளான் சிவபுரம், கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் பல ஆயிரக்கணக்கானமக்கள் தற்போது நிலவும் வரட்சி நிலை காரணமாக நீரைத் தேடி அலைந்து திரிவதை காணக்கூடியதாக உள்ளது.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் வீ.இராசரத்தினத்திடம் கேட்டபோது மேற்குறித்த கிராமங்களில் தற்போது நிலவும் வரட்சி காரணமாக குடிநீர் நிலைகள், குளங்கள் என்பன வரண்டு போய் உள்ளன.

இவர்களுக்கான குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்ய 4500 லீற்றர் நீரைக் கொண்ட 4 பவுசர்களும் 4 உழவியந்திரங்களும் தேவையாக உள்ளன.

இந்நிலையில் எமது நடப்பாண்டு நிதி மூலம் மூன்று இலட்சம் ரூபாவிற்கு 4500 லீற்றர் நீர் கொள்ளளவு பவுசரை கொள்வனவு செய்து எம் மிடம்உள்ள ஒரே ஒரு உழவியந்திரம்மூலம் கடந்த திங்கட்கிழமை துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன் ஆரம்பித்துவைக்க, கல்விளான் கிராமத்திற்கு குடிநீர், வழங்கி வருகின்றோம்.

மீதமாக தேவையாக உள்ள 3 பவுசர்களையும் அரச அதிபர், உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுள்ளோம்.

அவர்கள் தரும் இடத்து இப்பிரதேசமக்களது குடிநீர் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதேச சபையின் நிதி 50 இலட்சம் ரூபா நிரந்தர வைப்பில்இடப்பட்டுள்ளதாகவும் இந்நிதியினை பயன்படுத்தி தமது குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு பிரதேச சபையினர் ஆர்வம் காட்டவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந-3-15)

# சம்பளத்தை உயர்த்த முடியாது; (உ/த) விடைத்தாள் திருத்த வரமாட்டோம்

## அவர்களும் இவர்களும் உறுதி

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய அரச உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடுகையில், சுமாரான அளவு விரிவுரையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் சம்பள உயர்வு பிரச்சினைக்கு உரிய தீர்வு வரும் வரையில் பணிப்பகிஷ்கரிப்பை கைவிடப்போவதில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார். (ந-1)

# நாணயத்தாள்கள் அச்சிடும் பிரித்தானிய கம்பனிக்கு எதிராக ஐ.தே.க. முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் நாணயத்தாள்களை அச்சடிப்பதற்காக நிறுவப்பட்ட டி லா றூ எனப்படும் பிரித்தானியக் கம்பனிக்கு எதிராக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது.

பிரித்தான்யாவின் பங்கு பரிவர்த்தனை கம்பனியான டி லா றூ வினால் அந்நிய செலாவணியை மீதப்படுத்த முடியுமெனவும் வேலைவாய்ப்புகள் உருவாகும் எனவும் கருதப்பட்டது.

ஆனால், அண்மைக்காலத்தில் ஒரு லத்தீன் அமெரிக்க நாட்டிலிருந்து நாணய தாள்களை இறக்குமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்த வேலையை மத்திய வங்கி இந்த கம்பனிக்கு வழங்கியுள்ளது. அத்துடன் இந்த வேலைக்கான கேள்விப்பத்திரமும் கோரப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

எனவே, இக் கம்பனி அந்த நாட்டின் ஊழல் சட்டத்தின் கீழ் வருகின்றது. குறித்த கம்பனி கொடுக்கல்– வாங்கல் விடயத்தில் மத்திய வங்கிக்கு இலஞ்சம் அல்லது தரகு வழங்கியுள்ளதா என சந்தேகம் எழுந்துள்ளது. இதனை அறிய விரும்புவதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துடன் கலந்துரையாடவுள்ளோம்.

இதேவேளை, இப்படியான நாணயத்தாள் இறக்குமதி எதுவும் நடக்கவில்லையென மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறினார். நாம் விரும்பினால் எந்த நாட்டிலும் நாணயத்தாள்களை அச்சிடமுடியும்.

இது சட்டத்துக்கு முரணானது அல்ல. இருப்பினும் நாம் அப்படி செய்யவில்லை. டி லா றூ மூலம் இலங்கையில் நாணயத்தாள்களை அச்சடித்தோம் என அவர் தெரிவித்துள்ளார். (2-9)





விசுவமடு மத்திய நூலகத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசுவமடு மேற்கு கிராம சேவகர் திருமதி நாமலா மங்கல விளக்கேற்றுவதையும் லெப்ரினன் ரத்நாயக்க மத்திய நூலகத்தின் பெயர்ப்பலகையினை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- இராமநாதபுரம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.வி.பு. தலைவரை இந்தியா புரிந்துகொள்ள தவறியமையே ஒப்பந்தம் தோல்வியுறக் காரணம்

**இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கு 25 வயது ஆகிய நிலையில் இந்த ஒப்பந்தத்தின் நிலை என்ன? என்பது பற்றி அப்போது இலங்கையில் கடமையாற்றிய கேனல் ஹரிகரனுடான செவ்வி**

*கே: 1987 ஜூலை 29 அன்று ராஜீவ் காந்தி – ஜெயவர்த்தனா ஒப்பந்தம் கச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இந்த ஒப்பந்தம் தொடர்பில் இந்தியாவின் பரதிநிதித்துவமானது இராஜதந்திர ரீதியில்முற்றிலும் தோல்வியடைந்துள்ளதாக தற்போது பலர் கருதுகின்றனர். 1987- 1990 வரையான காலப்பகுதியில் இந்தியப்படைகள் கடமையில் ஈடுபட்டிருந்த பொழுது இலங்கியில் பணியாற்றிய ஒருவர் என்ற ரீதியில் இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?*

ப: புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களில் சிலர் ராஜீவ் காந்தி – ஜெயவர்த்தனா ஒப்பந்தம் தொடர்பில் இந்தியாவின் பிரதிநிதித்துவமானது இராஜதந்திர ரீதியில் முற்றிலும் தோல்வியடைந்ததாக கருதுகிறார்கள். இந்த உடன்பாடானது ராஜதந்திர முயற்சியை விட மூலோபாயப் பிரதிநிதித்துவத்தையே அதிகம் கொண்டுள்ளது. இலங்கைப்படைகள் வடக்கிலிருந்து பின்வாங்கப்பட வேண்டுமென்ற இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஏற்றுக்கொண்டதன் பின்னரே இந்திய–இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

முற்றுகையிடப்பட்டிருந்த யாழ். மக்களுக்குத் தேவையான உணவுப் பொதிகளை இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள் வீசின. இது *பூமாலை* நடவடிக்கையென பெயர் சூட்டப்பட்டது. இப்பூமாலைநடவடிக்கையைத்தொடர்ந்து வேறெந்த வெளித்தரப்பினதும் உதவியைப் பெறமுடியாது என உணர்ந்து கொண்ட ஜெயவர்த்தன, இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைமேற்கொண்டார். இந்தியாவின் உதவியை இலங்கை தட்டிக்கழித்திருந்தால், இந்தியாவானது இந்த விடயத்தில் தனது பலத்தைப் பயன்படுத்துவதில் எந்தவொரு தயக்கத்தையும் காண்பித்திருக்காது.

இந்நடவடிக்கையானது இந்திய தேசம் இலங்கையில் பிறிதொரு பங்களாதேசத்தை சந்திப்பதுடன் சுதந்திர தமிழழத்தை உருவாக்கும் என்பது இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தமானது ஐக்கிய இலங்கைக்கு இந்தியா தனது ஆதரவை வழங்குவதற்கான உறுதிமொழியாக காணப்பட்டது மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசிற்கு கால அவகாசத்தை உருவாக்குவதன் மூலம் சுதந்திர ஈழத்திற்கான போராட்டத்தை தணிக்கவும் உதவியது. இதனால், இலங்கைத் தமிழர்களில் ஒரு சாரார் இந்தியாவின் செயலால் ஆத்திரமுற்றனர்.

இந்த உடன்பாடனது இரு பகுதிகளைக் கொண்டிருந்தது. முதலாவது, இந்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற பனிப்போரைத் தழுவியதாகும். அதாவது பனிப்போர் காலப்பகுதியில் இந்தியாவின் நட்பு நாடாக விளங்கிய ஆப்கானிஸ் தானில் சோவியத் யூனியன் கிளர்ச்சிப்போரை மேற்கொண்டிருந்தபோது அமெரிக்காவானது, இலங்கையில் தாக்குதலை மேற்கொள்வதற்கான முயற்சியில் இறங்கியிருந்தது. இந்த உடன்பாட்டின் மறுபகுதியானது, இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழர்கள், பெரும்பான்மை மக்கள் போன்று

சுதுமலை நிகழ்வு



உரிமைகள் பெற்று வாழ்வதை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புபட்டதாகும். அமெரிக்காவனது இலங்கையில் தனது தடத்தை பதிப்பதை இந்த உடன்பாடு தடுக்கின்றது.

தமிழர் பிரச்சினை தொடர்பில் நிரந்தர தீர்வொன்றை எட்டுவதில் இந்த உடன்பாடு தவறியுள்ளதாயினும் இலங்கை அரசியலமைப்பில் 13 வது திருத்தச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படும்போது வடகிழக்கு மாகாணம் உருவாவதற்கான வழியை இந்த உடன்பாடு வகுத்துள்ளது. *வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றுசேர்த்து வடகிழக்கு மாகாணத்தை உருவாக்குவதற்கு கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்* என இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் தெளிவின்மை காணப்படுகிறது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருதரப்புகளாலும் வாய்மொழி மூலம் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்காகவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஆனால், தமிழ்மக்களின்



பிரதிநிதிகள் இந்த உடன்பாட்டில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. தமிழ் மக்களின் உரிமை இதில் தட்டிக் கழிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தமிழ் ஆயுதக்குழுக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் தமது போராட்டத்தை நடாத்திச் செல்வதற்கு இந்தியாவின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இத்தமிழ் பிரதிநிதிகள் தமது சொந்தக்கருத்துகளுக்கு அப்பால், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்தியாவுடன் மிக நெருங்கிய அரசியற்தொடர்பைக் கொண்டிருந்த, த.ஐ.வி.முன்னணி இந்த உடன்படிக்கை தொடர்பில்சில தெளிவின்மையைக் கொண்டிருந்த போதிலும், இதனை ஏற்றுக்கொண்டது. இதேபோன்றே ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ப்ளொட் ஆகிய மூன்று பெரிய தமிழ் ஆயுதக்குழுக்களும் இதனை ஏற்றுக்கொண்டனர். ஆனால், இந்த உடன்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர் ஏற்றுக் கொள்வதற்கானநிர்ப்பந்தத்தை வழங்க வேண்டியிருந்தது. அவர், இந்தியாவின் நோக்கம் தொடர்பில் சந்தேகம் கொண்டிருந்தார். ஏனையவர்களுடன் பிரபாகரனை இணைப்பதற்கு, பிரபாகரனுடனான எம்.ஜி.ஆர்.இன் செல்வாக்கை இந்தியா பயன்படுத்திக் கொண்டது. சிங்கள பெரும்பான்மையினர் இந்த உடன்படிக்கை தொடர்பாக ஆராய்ந்து அதிருப்தி கொள்வதற்கான கால அவகாசத்தை அப்போதைய அதிபர் ஜெயவர்த்தனா வழங்கவில்லை.



தற்போது இதனை மீட்டுப் பார்க்கையில், இவ் உடன்படிக்கை தொடர்பாக இலங்கையர்கள் மத்தியில் எதிர்ப்பு உருவாகும் என்பதை ஜெயவர்த்தனா எதிர்பார்த்திருந்ததை என்னால் உணரமுடிகிறது. இலங்கை இராணுவத்தினரும் இந்த உடன்படிக்கை தொடர்பில் திருப்தி கொண்டிருக்கவில்லை. எனக் கூறப்பட்டது. தனக்கெதிராக ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலையும் தடுப்பதற்காகவே இந்தியப் படைகள் இலங்கைக்கு வரவேண்டும் என்பதை ஜெயவர்த்தனா விரும்பியிருந்தார்.

இந்த அடிப்படையில் ஏற்பட்ட பேரம்பேசலின் விளைவாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியப் படைகளை யுத்தத்தில் ஈடுபடுத்துவதில் ஜெயவர்த்தனா செயற்பட்டார். ஜே.வி.பி. கிளர்ச்சியை முறியடிப்பதற்கும் ஜெயவர்த்தனா இந்த வாயப்பைப் பயன்படுத்திக் கொண்டார். இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் இலங்கையும் தவறிழைத்துள்ளது. ஒட்டுமொத்தமாக பார்க்கையில், இரு நாட்டுத் தலைவர்களும் இந்த உடன்படிக்கையின் பொது நோக்கத்தை நிறைவுபடுத்துவதற்குப் பதிலாக தமது சொந்த நோக்கை அடைந்துகொள்வதற்காகவே இதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

*கே: உண்மை நிலைப்பாடு தொடர்பாக ஆராய்ந்துகொண்ட இந்திய இராணுவத்தினர், இந்த உடன்படிக்கையை மிக வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் ஏன் எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை?*

பதில்: இந்திய இராணுவம் என்பது இந்திய அரசாங்கத்தின் கருவியாகும். இலங்கை இராணுவத்திற்கும், தமிழ் இராணுவத்திற்கும் இடையில் மோதல் தவிர்ப்பு உத்திரவாதத்தை உறுதிப்படுத்துவதை மட்டுமே இந்திய இராணுவமானது தனது மட்டுப்படுத்தப்பட்ட ஆணையாகக் கொண்டிருந்தது. இந்த உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளது போன்று தமிழ் மக்களுக்கான சுயாட்சியை இலங்கை வழங்க முடியும். தான் இந்தியாவுக்குக் கட்டுப்படமாட்டேன் என்பதை இலங்கைக்குத் திரும்பியிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரால் வழங்கப்பட்ட *சுதுமலைத் தீர்மானத்திலிருந்து* அறியமுடிந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளித்தபின் மீண்டும் ஆயுதங்களை தூக்குவார்கள் என நாம் எதிர்பாக்கவில்லை. இதன் பின்னர்புலிகள் அமைப்பும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களும் மோதிக்கொண்டர். இதன் விளைவாக, இடைக்கால நிர்வாகம் என்பது செயலற்றதாகியது. இது இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஆபத்தை எதிர்நோக்குவதை தெளிவாக காண்பித்தது.

இந்திய புலனாய்வு அமைப்புக்கள் இந்திய உடன்படிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஏற்றுக்கொள்வதற்கான உந்து தலை வழங்கமுடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சில சலுகைகளை வழங்குமாறும், இந்திய- இலங்கை ஒப்பந்தம் தொடர்பில் நம்பிக்கை கொள்வதற்கான சில ஏற்பாடுகளை மேற்கொள்ளு மாறும் இந்தியபுலனாய்வு அமைப்புகள், இந்திய அரசாங்கத்திடம் ஆலோசனை வழங்கியிருக்க முடியும். பிரபாகரனின் பிடிவாதம் தொடர்பாக இந்திய புலனாய்வு அமைப்புகள் குறைவாக மதிப்பீடு செய்திருந்தனர் என்பதை மட்டுமே என்னால் கருத முடிகிறது. இந்த உடன்படிக்கையின் வெற்றிக்கு புலிகள் மிகப்பெரிய தடையாக இருந்திருப்பார்கள் என்பதை எவரும் நியாயப்படுத்த முடியாது. இந்திய அரசாங்கம், புலனாய்வு அமைப்புக்கள், மற்றும் தமிழீழத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆயுதம் தாங்கிய இயக்கத்தை வழிநடாத்திய வி.த.புலிகளின் தலைவரின் ஒற்றை மனப்போக்கை புரிந்து கொள்ளத் தவறிய இராணுவத்தினர் போன்ற பலரும் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்குக் காரணமாக உள்ளனர்.

*கே: இந்த உடன்படிக்கைக்கு மீண்டும் புத்துயிர் வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றனவா?*

பதில்: இந்த உடன்படிக்கை வரயப்பட்டு நீண்டகாலமான நிலையிலும் இது செயற்பாட்டில் இருக்க வில்லை. மாகாணசபைகளை உருவாக்கி மக்களுக்கு சுயாட்சியை வழங்குவத்கேற்ற வகையில் 13–வது திருத்தச் சட்டம் வரையப்பட்டுள்ளது. முற்றுமுழுதாக நிறைவேற்றாவிட்டாலும் கூட் தமிழ் மக்கள் தமது அரசியல் போராட்டத்தை குறிப்பாக மே 2009 இல் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண் டுவரப்பட்ட பின்னர் தொடர்வதற்கான கருவியாக 13–வது திருத்தச்சட்டம் அமைந்துள்ளது.

*கே: இந்த உடன்படிக்கையை மீண்டும் செயற்படுத்துவதில் இலங்கை மற்றும் இந்தியா ஆகியன இணைந்து செயலாற்றுவதுடன் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை வென்றெடுக்க வேண்டும். இந்நிலையில் இந்தியாவால் இதனை நிறைவேற்ற முடியுமா?*

பதில்: இலங்கையில் மூன்று ஆண்டுகளாக அமைதி நிலவுகின்ற போதிலும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்னமும்தீர்க்கப்படவில்லை. போரால் பாதிக்கப்பட்ட வடக்குமாகாணத்தில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு இலங்கைக்கு இந்தியாவின் உதவி தேவைப்படுகிறது. தமிழ்மக்களின் பிரச்சினைகளை இதயசுத்தியுடன் முன்னெடுப்பது தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல் புரிந்துணர்வு ஒன்று ஏற்படுமிடத்து இவ்வாறான அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கமுடியும். 1971 இல் பங்களாதேஷத்துடன் திருமதி. இந்திராகாந்தி உடன்பாட்டை மேற்கொண்டார். அதேபோன்று 1987 இல் ராஜீவ், இலங்கையுடன் ஒப்பந்தத்தைமேற்கொண்டார். ஆனால், தற்போது இந்தச் சவால்களை முன்னெடுப்பதில் ஆர்வம் கொண்ட இந்தியத் தலைவர்கள் ஒருவரையும் என்னால் காணமுடியவில்லை.

நியூஸ் போட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் பதினேழாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்துமதம் காட்டும் ஆன்மீகம் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மூளாய் ஞான ஒளி அறநெறிப்பாசாலை, நயினாதீவு அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விசேட நிகழ்வாக இசைக்கலை மாணி திருமதி அன்னலக்சுமி தனபாலசிங்கத்தின் பக்திப்பாடல் நிகழ்வும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதினேழாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை வயலின் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வயலின் எஸ்.கோபிதாஸ், கே.குகபரன், மிருதங்கம் கே.கண்ணதாசன், கடம் பிரம்மஸ்ரீ சிவசுந்தர சர்மா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதினேழாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் தாரகன் வதம் எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதினேழாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தெய்வீக பேருரைகளும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாமிருக்கப் பயமேன் எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை சைவப்புவலர் பொன்.சுகந்தன் ஆற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதினேழாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு நந்தினிதேவி உதயகுமாரனின் இசைக்கச்சேரி நடைபெறும். (அ-9)

# ஆசிரியர்களுக்கான விசேட விடுமுறைகள் ஒரு சில வலயங்களில் வழங்கப்படுவதில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விசேட விடுமுறைகள் யாழிலுள்ள ஒரு சில வலயங்களில் வழங்கப்படுவதில்லை எனவும் அவ்வாறு விடுமுறை வழங்காத கல்வி அதிகாரிகளுக்கு எதிராக தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் தமது பரீட்சை நேரங்களில் 10 நாட்கள் விசேட விடுமுறை எடுப்பதற்கு மத்திய கல்வி சுற்றறிக்கையின் படி இடமுள்ளது.

அனைத்து வலயங்களிலும் கல்விப் பின் பட்டப்படிப்புக்கு விடுமுறை வழங்கப்படுகின்றதோடு சில வலயங்களில் மட்டும் குறிப்பாக யாழ். வலயத்தில் அனைத்து பட்ட மேற்படிப்புக்களுக்கும் விசேட விடுமுறை வழங்கப்படுகின்றன.

இவ்வாறு ஏனைய பட்ட மேற்படிப்புகளுக்கு விடுமுறை வழங்காத வலயங்களில் ஒன்றான வலிகாம வலய பணிப்பாளருடன் இது தொடர்பில் கேட்டபோது,

கல்விப் பின் பட்டப்படிப்புக்கு விசேட விடுமுறை வழங்குவதற்கு கல்வியமைச்சு சுற்றறிக்கை ஒன்றினை வழங்கியுள்ளது.

எனினும் ஏனைய பட்ட மேற்படிப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கு எவ்வித சுற்றறிக்கையும் கல்வியமைச்சினால் எமக்கு வழங்கப்படவில்லை.

ஏனைய சில வலயங்களில் இவ் விசேட விடுமுறை வழங்கப்பட்டாலும் எமக்கான சுற்றறிக்கை வழங்கப்படாவிட்டல் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

எனினும் ஆசிரியர்கள் அதற்கான சுற்றறிக்கையினை எம்மிடம் கொண்டு வந்தால் நாம் கட்டாயம் அவர்களுக்கு விசேட விடுமுறை வழங்குவோம் என அவர் தெரிவித்தார். (ந-4)

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுமதிப்பத்திரமின்றி 50 பஸ்கள்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 50 தனியார் பேருந்துகள் அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் இவ்வாறான 70 பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவர் ரோஷன் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை 50 ஆக குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடுவதை தடுப்பதற்கான அமைச்சரவை பத்திரமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் இன்றி போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபா அபராதமும் இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று பதினேழாம் திருவிழா



## கரம் குவித்தோம் வாருமையா



நல்லவை தேயவே
அல்லவை பெருகுதையா
அல்லலை போக்க
நல்லூரா வாருமையா

வாருமையா வாருமையா
வள்ளி மணாளனே
தீருமையா தீருமையா
தீயோரைத் தீருமையா
காருமையா காருமையா
கரம் குவித்தோம் காருமையா

*மு.கேசவன், தொல்புரம்.*

## வருவான் முருகன்

நல்லூரில் வீற்றிருப்பாய்
நலங்கள் யாவும் தந்திடுவாய்
மயில் மீது வந்திடுவாய்
மன நிம்மதியை தந்திடுவாய்
குன்றிலே நின்றிடுவாய்
குறைகளை நீக்கிடுவாய்

*க.செல்வமலர், சிறுவர் இல்லம்.*

## துணை நிற்பான் வேலவனே



வல்வினையை நீக்கிவிடும்
நல்லூரான் திருவடியை
அல்லும் பகலும் தொழும்
அடியவர் அனைவருக்கும்
எல்லையில்லா இன்பமும்
தொல்லையில்லா வாழ்வும்
தொடர் கதையாய் வருவதற்கு
துணை நிற்பான் வேலவனே

*ந.சந்திரலிங்கம், அச்சுவேலி.*

## ஆளும் பெற்றிமையோ பேருளோ

நல்ல முருகன் என்று நாடெலாம்
நயந்து போற்ற நாம் கேட்டு
அல்லல் களைந்து அடிதொழ வந்தெமை
ஆதரித்து அருள்வாய் திறந்து
நல்லூர் பதியிலும் நல்லவர் நெஞ்சிலும்
நாமுறைவோம் என்றமுத வார்த்தை
சொல்லா திருப்பதுதான் சேவற்கொடியார் தொண்டரை
ஆளும் பெற்றிமையோ பேருளோ

*சிவ சண்முகவடிவேல், ஏழாலை.*

## அழுகின்ற தமிழர் எங்கள் அவலங்கள் தீருமையா

சூரனை ஒழித்தாயென்றும் சூழ்வினை கடிந்தாயென்றும்
பழம் ஒன்றுக்காக அன்று பழனிக்குச் சென்றாயென்றும்
பழசுகளை வைத்தே இங்கே பலகவிஞர் வாழ்த்துகின்றார்
(பாடுகின்றார்)

அழகிய நல்லைவேலா அருள் இன்றும் உள்ளதென்று
அவனியோர்க்கு உணர்த்தும் வண்ணம்
இளகி நீ எம்முன்வந்து
அழுகின்ற தமிழர் எங்கள் அவலங்கள் தீருமையா



*கவிமணி அன்னைதாஸன், ஊரெழு.*

CITY COLLEGE OF ENGLISH





143, ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி



T.P :- 021 2220384 - 077 8803887,
021 3216027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

185

## தெனாலிராமன் வளர்த்த பூனை

ஒரு சமயம் விஜய நகர சாம்ராஜ்யத்தில் கிருஷ்ணதேவராயரின் பிறந்த நாள் கொண்டாட்டம் சுமார் பதினைந்து நாட்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆட்டம், கதை, கூத்து என்று விஜயநகர மக்கள் பதினைந்து நாட்களும் வெளியூர்களில் இருந்து வந்திருந்த தங்கள் உறவினர்களுடன் ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் நாட்களைக் கழித்தனர். கிருஷ்ணதேவராயர் தன் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது தன் நாட்டு மக்களுக்கு விதவிதமாகப் பலகாரங்கள் தயார்செய்து அரண்மனைக்கு தன்னைக் காணவந்த தன் நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது பக்கத்து நாடுகளில் இருந்து வந்த மக்கள் அனைவருக்கும் வழங்கினார். கிருஷ்ணதேவராயர் அளித்த சுவையான பலகாரங்களை உண்ட மக்கள் அனைவரும் வயிறாற உண்டு மன்னர் மனம் குளிர வாழ்த்திச் சென்றார்கள்.

மன்னர் அளித்த பலகாரங்களை உண்ட விஜய்நகர மக்கள் தாங்கள் உண்டது போக மீதி இருந்த பலகாரங்களை வீதிகளிலும் காலி மைதானங்களிலும் வீசியதால் எலிகள் பெருகி விட்டன. நாளுக்கு நாள் எலிகளின் தொல்லை அதிகமாகி நகரத்திலிருந்த அத்தனை வீடுகளிலும் எலிகள் குடியிருக்க ஆரம்பித்துவிட்டன. எலிகளின்தொல்லையை பொறுக்க முடியாத நகரமக்கள் தாங்கள் எலிகளின் பிடியிலிருந்து விடுபட வழி செய்யுமாறு தங்கள் மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் முறையிட்டார்கள்.

மக்கள் குறைகளைத் தீர்ப்பதையே தன் முதற்கடைமையாக கொண்ட கிருஷ்ண தேவராயரும் உடனே தன் மந்திரிகள் அனைவரையும் அழைத்து ஆலோசனை நடத்தினார். நீண்டநேரம் விவாதம் நடத்திய மந்திரிகள் மன்னர் கிருஷ்ணதேவராயரிடம் எலிகளை முற்றிலுமாக ஒழிக்க ஒரே வழி வீட்டுக்கு ஒரு பூனை வளர்ப்பது தான் என்று அனைத்து மந்திரிகளும் ஒரே குரலில் கூறினார்கள். சிறிது நேர யோசனைக்குப்பின் மன்னர் கிருஷ்ணதேவராயர் மந்திரிகள் கூறியதுபோல் எலிகளை ஒழிக்க வீட்டுக்கு ஒரு பூனை வளர்ப்பதுதான் சரியெனப்பட்டது.

உடனே மன்னர் கிருஷ்ணதேவராயர் தன் மூத்த காவல் அதிகாரியை அழைத்து விஜயநகரத்து வீதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் ஒரு பூனையை அளிக்குமாறு கட்டளையிட்டார். மூத்த காவல் அதிகாரியும் மன்னர் இட்ட ஆணையை உடனே நிறையவேற்றும் பணியில் ஈடுபட்டார். அவர் தன்னிடம் பணிபுரியும் காவல் அதிகாரிகளை அழைத்து பக்கத்து ஊர்களில் இருந்து பூனைகளை பிடித்துவந்து விஜய நகரத்து வீதிகளில் இருந்த அனைத்து வீடுகளுக்கும் ஒரு பூனை வீதம் அளிக்குமாறு உத்தரவிட்டார்.

விஜய நகர மூத்த காவல் அதிகாரியின் கட்டளையை காவல்அதிகாரிகள் உடனே நிறைவேற்றி விட்டார்கள். ஒருசில நாட்களில் பூனைகள் வீட்டின் மூலை முடுக்குகளில் இருந்த எலிகளைக் கௌவிப் பிடித்து தின்று விட்டன. எலிகள் கிடைக்காத பூனைகள் தங்கள் பசியைப் போக்கிக் கொள்ள வீட்டில் குழந்தைகளுக்காக வைத்திருந்த பாலை குடித்து விட்டு நிம்மதியாக உறங்கி வந்தன.

விஜயநகர மக்களுக்கு மீண்டும் ஒரு தலைவலி ஆரம்பமானது. எலிகள் கிடைக்காத பூனைகள் வீட்டின் சமையல் அறையில் நுழைந்து உணவுப் பண்டங்களை தின்று தொல்லை கொடுத்து வந்தன. பொறுமையாக இருந்து வந்த விஜய நகர மக்கள் தங்கள் பொறுமையை இழந்து மன்னரிடம் சென்று பூனைகளின் தொல்லையில் இருந்து விடுபட வழி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

மன்னரும் உடனே தன் மந்திரிகளை அழைத்து ஆலோசனை கேட்டார். மந்திரிகள் ஒன்றுகூடி ஆலோசித்து மன்னரிடம் ஒரு



யோசனை சொன்னார்கள். அதாவது பூனைகளுக்குப் பால் தேவைப்படுவதால் வீட்டிற்கு ஒரு பசுவை இலவசமாக அளிப்பதால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று கூறினார்கள்.

மன்னரும் அமைச்சரின் ஆலோசனைப்படி வீட்டிற்கு ஒரு பசுவை அளித்து அதன் பாலை பூனைகளுக்கு அளிக்குமாறு உத்தரவிட்டார். மன்னரின் ஆணைப்படி பூனைகள் இருந்த அத்தனை வீடுகளுக்கும் பால் கொடுக்கும் பசுக்கள் அளிக்கப்பட்டன.

விஜய நகரத்து ராஜவீதியில் வசித்து வந்த தெனாலிராமனுக்கும் ஒரு பசு கிடைத்தது. நீண்ட நாட்களாக தன் குழந்தைக்கு பசும்பால் கிடைக்காமல் கஷ்டப்பட்ட தெனாலிராமன் தனக்கு இலவசமாகக் கிடைத்த பசுவின் பாலை தன் குழந்தைகளுக்குக் கொடுத்து அவர்களை நல்ல ஆரோக்கியமான குழந்தைகளாக வளர விட்டான். தன் வீட்டில் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட பூனை இருப்பதையும் அதற்காகத் தான் மன்னர் பசுவை அளித்தார் என்பதையும் தெனாலிராமன் முழுமையாக மறந்து விட்டான். தெனாலிராமன் வீட்டுப் பூனைக்கு பால் கிடைக்காததால் அந்தப் பூனை பக்கத்து வீடுகளுக்குச் சென்று அந்த வீட்டுக்காரர்களுக்கு தொல்லையும் தொந்தரவும் கொடுத்து வந்தது. சில நாட்கள் பொறுமையாக இருந்த தெனாலிராமனின் பக்கத்து வீட்டுக்காரர்கள் தங்கள் பொறுமையை இழந்து நேராக மன்னர் கிருஷ்ணதேவராயரிடம் சென்று தெனாலிராமன் அவன் வீட்டுப் பூனைக்குப் பால் கொடுக்காததனால் அவன் வீட்டுப் பூனை தங்கள் வீடுகளுக்கு வந்து தங்கள் வீடுகளில் இருக்கும் பாலைக் குடித்து விட்டு சென்று விடுகிறது என்று புகார் செய்தார்கள்.

மன்னர் கிருஷ்ணதேவராயரும் உடனே காவலர் இருவரை தெனாலிராமனின் வீட்டிற்குச் சென்று தெனாலிராமனையும் அவன் வளர்க்கும் பூனையையும் அரச சபைக்குக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். தெனாலிராமன் வீட்டிற்குச் சென்ற காரவலர்கள் அவனிடம் அரசர் அவனையும் அவன் வளர்க்கும் பூனையையும் அரச சபைக்கு வரச் சொன்ன செய்தியை கூறினார்கள். காவலர்கள் கூறியதைக் கேட்ட தெனாலிராமன் காவலர்களிடம் தனக்கு சற்று உடல் நலம் சரியில்லாததால் நாளை காலை மன்னரின் ஆணைப்படி அரச சபைக்குத் தவறாமல் வருவதாகக் கூறினான்.

காவலர்கள் சென்ற உடன் தெனாலிராமன் தன் வீட்டில் இருந்த பாலைச் சூடாக்கி தனக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட பூனையின் முன்வைத்துகுடிக்கச்சொன்னான். நீண்ட நாட்களுக்குப் பின் தனக்குப் பால் கிடைத்த மகிழ் சியில் பூனை பாலின் அருகில் சென்று குடிக்கவும் சூடான பால் அதன் நாக்கை புண்ணாக்கி விட்டது. உடனே அது பால் இருந்த பாத்திரத்தை விட்டு வெகுதூரம் சென்று விட்டது.

## தெனாலிராமன் கதைகள்

மறுநாள் காலையில் தெனாலிராமன் எலும்பும் தோலுமாக தன்னிடம் வளர்ந்து வரும் பூனையை ஒரு கூடையில் போட்டு அதைப் பத்திரமாக தூக்கிக் கொண்டு அரசசபைக்கு சென்றான். மன்னர் கிருஷ்ண தேவராயர் அருகில் சென்ற தெனாலிராமன் தான் கூடையில் சுமந்து வந்த பூனையை கூடையிலிருந்து எடுத்து வெளியே விட்டான். எலும்பும் தோலுமாக இருந்த பூனை நடக்க முடியாமல் முனகியபடி உட்கார்ந்து விட்டது.

கிருஷ்ணதேவராயர் சற்று கோபமாக தெனாலிராமனைப் பார்த்து தெனாலிராமா! உனக்கு அரசாங்கம் அளித்த பசுவின் பாலை உன் பூனைக்குக் கொடுப்பதில்லையா என்று கேட்டார்.

தெனாலிராமனும் மன்னரைப் பார்த்து சற்றுப் பணிவாக அரசே! நான் வளர்க்கும் பூனை மிகவும் சாதுவானது. நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் அது நான் கொடுக்கும் பாலைக் குடிக்க மறுத்து பயந்து ஓடி ஒளித்துக் கொள்கிறது என்று சற்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான்.

மன்னரும் தெனாலிராமன் கூறுவது உண்மைதானா என்று சோதித்து பார்க்க விரும்பினார்.

மன்னர் தன் அருகில் இருந்த காவலனை அழைத்து அரண்மனை சமையல் அறையில் இருந்து ஒரு கிண்ணத்தில் பாலை ஊற்றிக் கொண்டு வருமாறு கூறினார்.

காவலனும் உடனே அரண்மனைச் சமையல் அறைக்குச் சென்று ஒரு அகன்ற வாயுடைய கிண்ணத்தில் பாலை ஊற்றிக் கொண்டு வந்தான். மன்னர் அந்தக் கிண்ணத்தில் இருந்த பாலை பூனைக்கு அருகில் வைக்குமாறு காவலாளியிடம் கூறினார். காவலன் பால் கிண்ணத்தை பூனைக்கு அருகில் கொண்டு செல்லவும் பூனை பால் கிண்ணத்தை பார்த்து நாலுகால் பாய்ச்சலில் ஓடி அரசசபையில் இருந்த ஒரு தூணின் பின் னால் ஒளிந்து கொண்டது. அருகில் இருந்த தென்னாலிராமன் மன்னரைப் பார்த்து அரசே! நான் வளர்க்கும் பூனை நான் எவ்வளவு முயற்சித்தாலும் பாலைக் குடிக்காமல் பயந்து ஓடுகிறது என்று கூறினான்.

தெனாலிராமனுக்குப் பிடிக்காத அமைச்சர் ஒருவர் மன்னரிடம் அரசே! தெனாலிராமன் வளர்க்கும் பூனையிடம் ஏதோ குறையுள்ளது போல தோன்றுகிறது. அதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

மன்னரும் பூனையைச் சோதித்துப் பார்க்க ஒப்புக் கொண்டார். பூனையைச் சோதித்துப் பார்த்த அமைச்சர் பூனையின் நாக்கு முழுவதும் சிவந்து புண் இருப்பதைப் பார்த்து அதை மன்னரிடம் கூறினார்.

மன்னர் தெனாலிராமனைப் பார்த்து பூனைக்குச் சூடான பாலைக் கொடுத்துக் குடிக்கச் சொல்லி அது ஆசையாகக் குடித்து மீண்டும்பால் குடிக்க முடியாமல் அதன் நாக்கு முழுவதும் புண்ணாக்கி விட்டாயே இது நியாயமா என்று கேட்டார்.

தெனாலிராமனும் சற்றும் பதற்றப்படாமல் அரசே! பூனைக்குப் பால்கொடுத்து அதை வளர்ப்பதை விட உங்கள் நாட்டில் உள்ள குடிமக்களில் வாலிபர்களுக்கும் நடுத்தர வயதுடையவர்களுக்கும் பாலூட்டி வளர்த்தால் என்றாவது ஒருநாள் அவர்கள் அனைவரும் நம் நாட்டு போர் படையில் சேர்ந்து நம் நாட்டின் மானத்தைக் காப்பாற்றுவார் கள்.

பூனையை கொழுகொழுவென்று வளர்த்து அதை உலவவிடுவதால் நாட்டுக்கு ஒரு பயனும் இல்லை. நீங்களே யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட மன்னர் சிறிது நரம் யோசித்தார். முடிவில் தெனாலிராமன் கூறியதில் இருந்த உண் மையை உணர்ந்து கொண்டு பூனைக்கு அளிக்கும் பாலை நாட்டு மக்கள் அருந்த உத்தரவிட்டார்.

அதனால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் நன்மையை உணர்ந்தார். தெனாலிராமன் கூறிய கருத்தை ஆமோதித்து அவனுக்கு நிறைய பரிசுகள் வழங்கி கௌரவித்ததோடு பசுவின் பாலை நாட்டு மக்கள் அனைவரும் அருந்த வழி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் தடம்பதிக்கும் யா/அராலி சரஸ்வதி ம.வி அதிபர் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலர்-09.08.2012

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம். இப்பெயரை எம்மில் பலர் அறிந்திருக்கமாட்டோம். ஆனால், அண்மைய ஆண்டுகளில் இப்பெயர் பிரபலம் பெற்று வந்துள்ளது. இப்பாடசாலையின் அண்மைக்கால கல்விச் சாதனைகள், இணைபாடவிதான செயற்பாடுகளில் தேசிய நிலையைத் தொட்டமை, பரீட்சை அடைவுகளின் தொடர்ச்சியான ஏறுமுகம், மாண எண்ணிக்கையின் சடுதியான அதிகரிப்பு, மாணவர்களின் தினவரவு மேம்பாடு, பாடசாலை மீதான சமூகத்தின் பற்றுறுதி ,அரசியற் பலம் மிக்கோரின் பாடசாலை மீதான கரிசனை, பலவிடத்தும் வாழ்கின்ற அராலியூராரின் அபிமானம் எனப் பல்வகைச் சிறப்புக்களை இவ் வித்தியாலயம் பெற்றுள்ளது. இப்பெருமை களுக்குரிய பின்புலம் யாது?

எமது பாடசாலைக் கட்டமைப்பில் பிரதான இடத்தை வகிப்பவர் அதிபர். ஒரு நல்ல அதிபர் உள்ள கூடாத பாடசாலை எவையும் சமூகத்தில் இல்லை என்பர். அவ்வளவான ஒரு நல்ல அதிபர் வரிசையைச் சேர்ந்தவர்தான் திரு மாரிமுத்து சோமசேகரம் அதிபர் அவர்கள். இவர் இப்பாடசாலை தொடர்பாக எண்ணற்ற கனவுகளை கண்டார். அக்கனவுகளை தனது கடின உழைப்பால் நிதர்சனமாக்கினார்.

ஒரு நல்ல அதிபரின் மிகச் சிறந்த பண்பு நம்பிக்கைக்குப் பாத்திரமாதல். இந் நம்பிக்கைக்குரியவர் என்ற சிறந்த பண்பு இவரிடம் மலிந்திருந்தது. ஒரு நல்ல வளர்ப்புத் தந்தையாக (Foster parent)இருந்து மாணவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்தார். ஆசிரியர்களின் ஆத்மார்த்த நண்பனாகி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். சிறந்த ஒரு பாதுகாவலனாகி பெற்றோரின் அன்புக்குப் பாத்திரமானார். நற்பண்புகளால் சமூக நன்மதிப்புக்குப் பாத்திரமானார். கடமை, கண்ணியம், நேர்மைப் பண்புகளால் அலுவலர்களின் கணிப்புக்குப் பாத்திரமானார்.

இவர் அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் கல்விப் பணியில் இருந்து ஓய்வு பெறமாட்டார். அராலிச் சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி தொடர்ந்தும் தனது உழைப்பை வழங்குவார் என நம்பலாம். அதற்கான அமைதியும் ஆரோக்கியமும் நீடித்து நிலைத்த ஆயுளும் அவருக்கு கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது எச்சங்களான அராலி சரஸ்வரி வித்தியாலய மாணவ மணிகளும் அவரது செல்லப்பிள்ளைகள் மூவரும் வாழ்வில் சிறப்புடன் விளங்க உளமார வாழ்த்துகின்றேன்.

ஆ.ராஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

## உப அதிபரின் வாழ்த்துச் செய்தி

இன்று எங்கள் பாடசாலை அதிபர் ஓய்வு பெறப்போகின்றார் என்பதை எண்ணும்போது துக்கமே நெஞ்சை அடைக்கின்றது. ஒன்பது ஆண்டுகளாக இங்கு பெருவிருட்சம் போலஇருந்த அதிபர் அவர்களின் பணிகள் அளப்பரியவை.

ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் மிகுதியான அன்பாகப் பழகுவார். ஆசிரியர்களின் சுகதுக்கங்களிலும் தப்பாமல் கலந்து வேண்டிய நேரத்தில் வேண்டியவற்றைச் செய்வார். மாணவர்களை அரவணைக்க வேண்டிய இடங்களிலே அரவணைத்து கண்டிக்க வேண்டிய இடங்களில் கண்டித்து அன்புகலந்த கண்டிப்போடு மாணவர்களை நல்லமுறையில் வழிநடத்தி வந்த பெருந்தகைதான் அதிபர் அவர்கள்.

இவரது இந் நடைமுறையாலே எமது பாடசாலை மாணவர்கள் சங்கானைக்கோட்ட மட்ட, வலய மட்டபோட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைக்குள்ளும் வந்து மாவட்டம், மாகாணம் ஆகிய இடங்களுக்கும் தெரிவாகி இருக்கின்றார்கள். பல மாணவர்கள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் உயர்வான சித்தி பெற அரும்பாடுபட்டதோடு கடந்த 2009 இல் க.பொ.த. சாதாரணதர மாணவர்கள் 100% சித்தியை அடைய வழிகாட்டியாக இருந்தவருமாவார். அவரின் பெரு முயற்சியால் ஓய்வு பெறும் இவ்வாண்டில் வித்தியாலய வலைப்பந்தாட்ட அணியினர் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி இருப்பது எமக்கு கிடைத்த பெருஞ் சாதனையாகும். வித்தியாலய அதிபர்களின் வரலாற்றில் உயர்வான சேவையாற்றிய அதிபர் அவர்களின் காலம் வித்தியாலய வரலாற்றில் பொற்காலமாகும். எனவே அதிபர் அவர்களின் பணிகள் என்றும் நிலைக்க பாராட்டுவதோடு அவர் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி.சுந்தரவதனா வசந்தகுமார்
(உப அதிபர்)



## உயர்திரு. மாரிமுத்து சோமசேகரம் அவர்கள் (அதிபர் சேவை தரம் II-I)

அதிபர் அவர்களின் சேவைக்காலம் பற்றிய விபரங்கள்
ஆசிரியர்- பயிற்றப்பட்ட விவசாயம்-1979 முதல்

I .கிளி / இரணைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை 23.02.1979-18.01.1982

II. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பயிற்சி-பலாலி 19.01.1982 -31.12.1983

III. யா/ மாதகல் சென்ஜோசப் மகா வித்தியாலயம்-01.01.1984-30.06.1987

IV. யா/வட்டு மத்திய கல்லூரி 01.07.1987-24.05.2000

அதிபர் சேவை

I.யா/ அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை 25.05.2000 - 24.07.2003

II.யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 25.07.2003 - 09.08.2012

## வித்தியாலய ஆசிரியர்களின் வாழ்த்துச் செய்தி

ஒன்பது ஆண்டுகள் உயரிய அதிபர் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் மிகப்பெரிய வைரத்தூண் ஆவார். ஒருநாளின் பெரும் பகுதியை வித்தியாலயத்தோடு கழித்து இன்று வித்தியாலயத்தை கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்க வைத்திருக்கிறார். ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரதும் மனங்களைப் புரிந்து அவர்களுக்கு என்னதேவை என்பதை அறிந்து சிறப்பாக அவற்றைச் செய்துமுடிப்பார்.

ஆசிரியர்களுக்கும் சரி மாணவர்களின் கல்வி, இணைபாட விதானச் செயற்பாடுகளுக்கு எந்தநேரம் எனப்பாராது யார் யாரைச் சந்தித்து எப்படி எப்படி எல்லாம் முன்னேற்ற வேண்டுமோ அப்படி எல்லாம் உயர்த்தியவராவார்.

அவரின் அரும்பெரும் முயற்சியால் உறங்கிக்கிடந்த வித்தியாலய விளையாட்டு அணிகள் பலவற்றுக்கு உயிர்கொடுத்து உயர்த்திவிட்டு இருக்கின்றார். உதைபந்தாட்ட அணி, துடுப்பாட்ட அணி, கரப்பந்தாட்ட அணி, மேசைப்பந்தாட்ட அணி, வலைப்பந்தாட்ட அணி எனப்பல விளையாட்டு அணிகளையும் சீராக்கி உயர்த்தி இன்று வலைப்பந்தாட்ட அணியைத் தேசிய மட்டம் வரை செல்வதற்கு உயர்த்தி வைத்திருக்கின்றார். அவரின் செயற்பாடுகள் என்றும் அவரை வித்தியாலயத்தின் சிகரமாகக் கொள்ளும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. அதிபர்களுக் கெல்லாம் அதிபராக, ஆசிரியர் களுக்கெல்லாம் ஆசிரியராக, நல்லதோர் தலைவனாக, சிறந்த நற்பண்பாளராக இருந்து அதிபர் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் அதிபர் அவர்களின் பணிகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் அவரின் சேவை வித்தியாலயத்திற்கு கிடைக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி

யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் நிலைக்கத்தக்க பெரும்பணிகள் ஆற்றிய பெருமகான் உயர் திரு மா. சோமசேகரம் அவர்கள் கடந்த 90 ஆண்டுகளில் படிப்படியாக வளர்ச்சியடைந்துவந்த வித்தியாலயம் இறுதிப் பத்து ஆண்டுகளில் உயர்வான வளர்ச்சியடைந்தது என்றால் அது அதிபர் அவர்களின் முழு முயற்சியேயாகும். இரவு, பகல் எனப்பாராது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்தவராவார். வித்தியாலயத்தின் முன்னால் இருக்கும் இரண்டு மாடிக்கட்டடமும் தற்போது கட்டி முடியும் நிலையில் இருக்கும் கட்டடமும் நீர்த்தாங்கியும் புனருத்தாரணம் செய்யப்பட்ட நன்னீர்க்கிணறும் இன்று வர்ணப்பூச்சுக்களோடு திகழும் வித்தியாலய மற்றைய கட்டடங்களும் அதிபர் அவர்களின் பணிகளை அகிலமெலாம் என்றும் நிலைநாட்டும் என்பதில் ஐயமில்லை.

அதிபரின் அயராத முழுமுயற்சியினால் இன்று தலைநிமிர்ந்து நிற்கும் யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் என்றென்றும் அதிபரின் பணிகளை பறைசாற்றிக்கொண்டிருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

## பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையினரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு அதிபராகப் பதவியேற்று இற்றைவரை தனது சேவையிலே கண்ணும் கருத்துமாக இருந்து வித்தியாலயத்தைப் பல்வேறு வழிகளில் உயர்த்தி வைத்த பெருந்தகை தான் உயர்திரு. மாரிமுத்து சோமசேகரம் அவர்கள்.

அதிபர் அவர்களின் பணிகள் கணிசமானவை, காத்திரமானவை, நிலைக்கத்தக்கவை. ஒன்பது ஆண்டுகள் வித்தியாலயத்தின் அதிபராக இருந்து ஒரு பசுமைப்புரட்சியை ஏற்படுத்திவைத்த பெருந்தகை.வித்தியாலயத்தின் கட்டடப் பற்றாக்குறைகளை நிவர்த்திசெய்யும் முகமாக பலகாலம் முயன்று இரண்டுமாடிக் கட்டடங்கள் இரண்டைப்பெற்றிருக்கின்றார்.

மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சிறந்தோங்குவதற்காக எத்தனையோ செயற்பாடுகளை முன்னெடுத்து க.பொ.த. சாதாரண தர வகுப்பில் 100% சித்தியைக் கூட மாணவர்கள் பெற வழிகாட்டி வைத்தவராவார்.

அந்த வளர்ச்சியோடு மட்டுமல்லாது, வித்தியாலயத்தை க.பொ.த.உயர்தரப் பாடசாலையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று அரும்பாடுபட்டு இன்று தரம் 1C பாடசாலையாக வித்தியாலயத்தை தரமுயர்த்தி வைத்திருக்கின்றார். அதுமட்டுல்லாது விளையாட்டுத்துறையில் அரும்பெரும் சாதனையாக இவ்வாண்டு (15வயது) , (17வயது) ஆகிய இரண்டு வலைப்பந்தாட்ட அணிகளையும் தேசியமட்டத்திற்கு அனுப்பிவைத்தது அழித்துவிடாத பெரும் வெற்றியாகும்.

அந்த வகையில் வித்தியாலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வளர்ச்சியில் உயர்ச்சிகண்ட அதிபர் மா.சோமசேகரம் அவர்களின் பணிகள் என்றும் நிலைக்க இறைவனை வேண்டி ஆசி கூறுவதோடு, அவர் நீண்டகாலம் வாழ்ந்து என்றும் சமூக சேவையாற்ற இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

## பழைய மாணவர்சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் அரும் பெரும் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் அதிபர் உயர்திரு மா. சோமசேகரம் அவர்களை என்றும் மறந்துவிடாத பழையமாணவர் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக வித்தியாலய வளர்ச்சிக்காக தன் முழுநேரத்தையும் அர்ப்பணித்து வளர்ச்சியில் உயர்வு கண்ட பெருந்தகை.

அதிபர் அவர்கள் அராலி பழைய மாணவர் சங்கத்தினர்களோடும் கொழும்புக் கிளை பழைய மாணவர் சங்கத்தினர்களோடும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டு வித்தியாலய வளர்ச்சிக்காக இரண்டு பழைய மாணவர் சங்கங்களையும் நன்கு பயன் படுத்தி பெரு வெற்றி கண்ட பெருமகன்.

அண்மையில் வித்தியாலய நூற்றாண்டு விழாவை செவ்வனே நடத்தி, அதே ஆண்டில் தானும் ஓய்வுபெறுகின்ற மணிவிழாவைக் காண்கின்றார் என்றால், வித்தியாலயத்தின் மீது அவர் கொண்டிருக்கின்ற அன்பும் பற்றும் நன்கு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

வித்தியாலயத்தோடு தொடர்புடைய பழைய மாணவர்கள் மற்றும் கல்வி, நிர்வாக அதிகாரிகள், அரச பிரமுகர்கள் என பலரிடம் தனி ஒருவராகக்கூட பல தடவைகள் சென்று வித்தியாலயத்தின் தேவைகளைக்குறிப்பிட்டு அவற்றைப் பூர்த்திசெய்திருக்கின்றார்.

இவ்வாறு இவர் காலத்தில் தமை 1C பாடசாலையாக தரமுயர்ந்து நிற்கும் வித்தியாலயம் இன்று தேசியமட் டம் வரை வலைப்பந்தாட்ட அணிகளைக் கொண்டு செல்கின்றது என்றால் அதன் பின்னணியில் அதிபரின் கடின உழைப்பும் பெருமுயற்சியும் நன்கு நிலைத்திருப்பதைக் காண்கிறோம். எனவே வித்தியாலய வரலாற்றில் என்றும் மறக்க முடியாத இடம் பிடித்த பெருமகனாகிய அதிபரின் பணிகளைப் பாரட்டுவதோடு அவர் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து அளப்பெரிய சேவைகள் ஆற்ற வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுக்கும் இலங்கையின் முயற்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்

## அவுஸ்.பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

சட்டவிரோத ஆட்கடத்தல்களைத் தடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு அவுஸ்திரேலியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் டொன்ரேன்டல் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகளை தடுக்க எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை தடுக்க இலங்கை காத்திரமான முனைப்புகளை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முனைப்புக்கள் வெற்றியளிக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு நிதி, புலனாய்வுத் தகவல்கள் உள்ளிட்ட பல் வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். யுத்த நிறைவின் பின்னர் நாட்டின் நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகவும் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் தெரிவித்து பலர் அடைக்கலம் கோரி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இவர்களில் பலர் பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோதமான வழிகளில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து நிறுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-2)

## சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்தநாள் விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தொல்புரத்தில் உள்ள சர்வோதய நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வினை தொல்புரம் சர்வோதய நிலையத்தினர் தாவடி இராம கிருஷ்ண சமிதியுடன் இணைந்து நடத்தவுள்ளதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பொன்மொழி, வில்லிசை, கவியரங்கம், சிறப்பு ஆன்மீக உரை என்பன இடம்பெறும். (ந-2)

# தேசியமட்ட அணியினருக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன

## யாழ். மாவட்ட செயலகம் ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று 58 ஆவது தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளுக்கான சீருடை மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் இருந்து இம்முறை தேசிய விளையாட்டுப் போட்டியில் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட அணி மற்றும் யாழ். மாவட்டத்தில் இருந்து பெண்களுக்கான உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்ட மற்றும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம் ஆகிய அணிகள் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் பெண்கள் உதைபந்தாட்ட அணியினருக்கான சீருடைகள் மற்றும் உபகரணங்கள் மாவட்டச் செயலகத்தில் வைத்து யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் வழங்கப்பட்டது.

சீருடைகளை வழங்கி வைத்து வாழ்த்துரை வழங்கிய அரச அதிபர் வடமாகாணம் விளையாட்டுத்துறையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது தான் அரச அதிபராக பதவியேற்று குறிப்பிட்ட காலத்தில் இதனை உணரக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு யாழ். மாவட்ட வீரர்களின் பங்களிப்பும் முக்கியமானது என்று குறிப்பிட்டார். இந்த சீருடை வழங்கும் நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரி திருமதி ரூபசிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ந-6)

# தரம் குறைந்த எரிபொருளுக்கு அரசியல் தலைவர்களே காரணம்

## அநுர எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் தலைவர்கள் மற்றும் கனியவளக் கூட்டுத்தாபன அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் மீண்டும் ஒருமுறை நாட்டில் தரம்குறைந்த எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக ஜனநாயகத் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

கொள்வனவு செய்யப்பட்ட டீசலில் எந்தப் பிரச்சினையும் இல்லை என அரசாங்கமும் கனியவளக் கூட்டுத்தாபனமும் கூறிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனங்களை பழுதாக்கிய டீசலை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதில் எந்த சிக்கலும் இருக்கவில்லை என கனியவளக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளதாக அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் கனியவளக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்பட்ட டீசலை பயன்படுத்திய வாகனங்கள் பயண இடைநடுவில் செயலிழந்து விடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்துக்கு பதிலளித்த கனியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தரம் குறைந்ததாக கருதப்படும் டீசல் வெளிநாட்டுக்கு பரிசோதனைக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்த பரிசோதனை அறிக்கையின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பாராளுமன்றில் தெரிவித்தார். (ந-2)

# நல்லூர் உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பகுதிக்குட்பட்ட நல்லூர் ஆலய சூழலை அண்மித்த வர்த்தக நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள், அன்னதான மடங்கள் மற்றும் தாகசாந்திகள் மீது கடந்த 4 ஆம் திகதி யாழ். மாநாகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதியின் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர், சுகாதார பாதுகாவலர்கள் மற்றும் ஏனைய உத்தி யோகத்தர்கள் ஆகியோர் இணைந்து இத் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அதன்போது அங்கு காணப்பட்ட சுகாதார குறைபாடுகளை கண்டு அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தி மனித பாவனைக்கு அப்பாற்பட்ட உணவுப் பொருட்கள் யாவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ந-9)

# வைத்தியசாலையிலும் சங்கிலி அறுப்புக்கள்!

## வருகின்ற நோயாளர்கள் அச்சத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சங்கிலி அறுப்புக்கள் தொடர்வதாகவும் இதனால் இங்கும் பயத்துடனேயே வரவேண்டிய நிலை காணப்படுவதாக நோயாளர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக வந்திருந்த வயோதிபப் பெண்மணி ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி ஒன்றினை அவர் அருகில் நின்ற ஒருவர் அறுக்க முயன்று உள்ளார்.

தனது கழுத்தில் கை வைக்கப்படுவதனை உணர்ந்த வயோதிபப் பெண்மணி உடனே ஐயோ! எனது சங்கிலி என சத்தமிட்டு கூச்சலிட்டதும் சங்கிலி அறுக்க முயன்றவர் அங்கிருந்து பாய்ந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் ஓடி மறைந்துள்ளார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலை பாதுகாவலர்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு வைத்தியசாலைப் பகுதியில் திருடனைப் பிடிப்பதற்கு தேடுதல் நடத்தியுள்ளனர். எனினும் திருடன் அகப்படாமல் தப்பிவிட்டான். (ந-4)

"ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா"

இலச்சார்ச்சனை



உரும்பிராய் தெற்கு
சிவதர்மசாஸ்த்தா ஐய்யப்பன்
திருக்கோயிலில்
09.08.2012 வியாழன்
இன்று மாலை 6 மணிக்கு
இலச்ச நாம அர்ச்சனை
ஆரம்பம் 28.08.2012 ஆம்
திகதி வரை 20 ஆவது தினம்
நடைபெறும் அடியார்கள்
சுவாமிமார்கள் அனைவரும்
வந்து தரிசித்து ஐயன் அருள்
பெறுக.
சரணம் ஐயப்பா

(சி/188)

இங்ஙனம்
ஆதீனகர்த்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி--கிளியே
நாளில் மறப்பாரடி

-- பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கூட்டத்தைக் குறைப்பதற்கு ஒரு கூட்டம் போடுங்கள்

அன்பர் ஒருவர் அலுவலகம் ஒன்றுக்கு மூன்று நாட்களாக அலைகின்றார். அந்த அலுவலகத்தின் அதிகாரியை சந்தித்து தனது பிரச்சினையை தெரிவிப்பதற்காகவே இந்த அலைச்சல்.

அலுவலகத்தில் இருப்பவர்கள், ஐயா கூட்டத்திற்குச் சென்றுவிட்டதாக கூறுகின்றனர். அதில் உண்மையும் இருக்கத்தான் செய்கிறது.

ஒவ்வொரு நாளும் கூட்டம் நடத்தும் கலாசாரம் வடமாகாணத்தில் எல்லை மீறிவிட்டது. கூட்டம் எதற்கு என்றால் பொதுமக்களின் பிரச்சினையை தீர்ப்பது எப்படி என்பதற்காகவே அது நடத்தப்படுகின்றது.

ஆனால் மக்களின் பிரச்சினையை கேட்டறிவதற்குக் கூட, நேரம் இல்லாதவாறு கூட்டம்... கூட்டம்.

அதிலும் அதிகாரிகள், திணைக்கள தலைவர்களுக்கு ஒவ்வொரு நாளும் கூட்டம். கூட்டத்தில் கருத்துரைப்போர் உரிய விடயத்தை சொல்வதற்குப் பதிலாக சுற்றிவளைத்து நேரத்தை வீணடிப்பர். கூட்டம் மாலை நான்கு மணிக்கு முடிபடைவதாக இருந்தால், அந்நேரத்தில்தான் உரிய விடயத்திற்கே வருகிறார்கள்.

இப்படியே கூட்டங்கள் நடப்பதானால் அலுவலகங்கள் ஊர்க்கதையிலும் உலகக்கதையிலும் மூழ்கிப்போய் செய்ய வேண்டிய பணியை செய்யமுடியாதுள்ளது.

உண்மையில் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் என்றால் அவர்கள் நேரகாலத்துடன் அலுவலகங்களுக்கு வருகைதந்து ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக நடக்கவேண்டும்.

ஆனால் அப்படி அவர்கள் செய்வதற்கு அதிரடிக் கூட்டங்கள் இடம் தருவதில்லை.

அதிகாரத்தில் உள்ளவர்கள் உணர்ச்சிவசப்படுகின்றபோது, கோபமடைகின்ற போதெல்லாம் கூட்டம் கூடுவதென்ற நடைமுறை முற்றாக நீக்கப்படவேண்டும்.

குறித்த திகதிகளில், அலுவலகப் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் கூட்டங்களை நடத்துவது,

அக் கூட்டத்தில் சொல்லப்பட வேண்டியவிடயங்களை மிகத்தெளிவாக முன்வைத்து ஒரு சில மணித்தியாலங்களில் கூட்டத்தை நிறைவு செய்வது என்ற திட்டமிடலை நடைமுறைப்படுத்த வடக்குமாகாண அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இதைவிடுத்து தொடர்ந்து கூட்டம், கருத்தரங்கு, தொடர்ந்து செயலமர்வு என்ற நிலைமை நீடிக்கப்படுமாக இருந்தால் வடமாகாணத்திலுள்ள அலுவலகங்கள் அல்லோலகல்லோலப்பட வேண்டி வரும் என்பது உறுதி.

தேகப்பயிற்சி என்பது ஆரோக்கியமான வாழ்விற்கானது. அதற்காக தேகப்பயிற்சிதான் வாழ்க்கை என்றாகிவிட்டால் வாழ்க்கை என்னாகும்?

இதுபோல கூட்டம், கருத்தரங்கு, செயலமர்வு என்பன மக்களுக்கான பணியை நேர்த்தியாக செய்வதற்கானது.

இதைவிடுத்து கூட்டங்களும் கருத்தரங்குகளுமே அலுவலகப் பணி என்றாகிவிட்டால் மக்கள் பணி என்னவாகும் என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. எனவே, அதிகாரிகள் அலுவலகங்களில் இருப்பதற்கு தடையாகவோ அலுவலகப்பணிகள் இடையறுவதற்கோ வழி வகுக்காமல் கூட்டங்கள் இடம்பெறவேண்டும். இது மிகவும் அவசியமானது.

# பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் இனவாதம் தோற்கடிக்கப்படவில்லை

## குறைபட்டுக்கொள்கிறார் நாலக தேரர்

விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் இனவாதம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, விக்ரமபாகு, சிறிதுங்க போன்றவர்கள் தமிழ் இனவாதத்தைப் போசித்து வருகின்றனர். மேற்குலக நாடுகள், கிழக்கு திமோர், லிபியா போன்ற நாடுகளில் மேற்கொண்ட அனர்த்தத்தை இலங்கையிலும் மேற்கொள்ள நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

சீனாவுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க இலங்கை மிக முக்கியமான கேந்திரநிலையம் என்பதால் சூழ்ச்சியாளர்கள் இலங்கையை அராஜக நிலைக்குள் தள்ள முயற்சித்து வருகின்றனர். அதிகார ஆசை உள்ளவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கு தேசிய உணர்வு இல்லை என்பதால் இந்த விடயங்கள் குறித்து அக்கறையில்லை. எனினும் நாம் இணைந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் எனவும் நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் மருத்துவர் வசந்த பண்டார அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் இந்தியா ஆகியன இலங்கை மீது கடும் அழுத்தங்களைப் பிரயோகி த்து வருகின் றன எனத் தெரிவித்துள்ளார். இந்தியா, இலங்கை மீது கடும் பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. இதற்குச் சிறந்த உதாரணம் கைவிடப்பட்ட சீபா உடன்படிக்கையை மீண்டும் கொண்டுவர இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கையாகும்.

கருணாநிதி ஈழமாநாடு ஒன்றை நடத்த உள்ளார். இதற்கு இந்திய மத்திய அரசாங்கம் எதிர்ப்புக்களை வெளியிடவில்லை. இலங்கையும் இதற்கு எதிர்ப்பு வெளியிடவில்லை. ஈழவாதிகள் புதிய ஈழம் என்ற திட்டத்தை செயற்படுத்தி வருகின்றனர். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கொண்ட மாகாண சபை ஈழத்திற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும் என வசந்தபண்டார மேலும் கூறியுள்ளார். (ந-8)

## மீள்குடியேற்றப்படாத மக்கள்

# கிராமசேவையாளர் ஊடாக வாக்காளராக பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றப்படாத மக்கள் தமது கிராமசேவையாளர் ஊடாக வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் இன்னும் மீள்குடியேற அனுமதிக்கப்படாத மக்கள் வேறு இடங்களிலும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தங்கிவாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் வாக்காளர்களாக அவர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டு அந்தந்தப் பிரிவு கிராமசேவையாளர் ஊடாக வாக்கா ளர் பதிவுப் பத்திரத்தினை பெற்று வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக வலிகாமம் வடக்கில் 24 கிராமசேவையாளர் பிரிவில் மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை.

இந்தக்கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் ஏனைய இடங்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களில் வாக்காளராக பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது கிராமசேவையாளர் ஊடாக வாக்காளராக தம்மையும் பதிவு செய்து கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# கட்டுரைப் போட்டி

சித்தன்கேணி சிவன் கோயில் அமரர் சிவஸ்ரீ.த. ஞானபண்டிதக் குருக்களின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு சங்கானை கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளதாக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இப்போட்டிகளில் 6 ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களே பங்கு கொள்ள முடியும். பங்கு கொள்ளும் மாணவர்கள் தமது பெயர், கற்கும் தரம், பாடசாலை, கட்டுரைத் தலையங்கம், அதிபர் உறுதிப்படுத்தல் ஒப்பம், முகவரி என்பனவற்றை தனித் தாளில் எழுதல் வேண்டும். இதற்கான கட்டுரை 500 சொற்களுக்கு குறையாமல் அமைதல் வேண்டும். கட்டுரைக்கான தலையங்கமானது சமயக் கல்வியின் அவசியம், விரதங்களும் விழாக்களும், இசைவழி இன்பம், மருத்துவமும் எமது சமயமும் என்பவற்றில் அமைதல் வேண்டும். கட்டுரைகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது சிவஸ்ரீ சபாவாசு தேவக் குருக்கள், ஞானரத்தினம், சிவன் கோயில், சித்தன்கேணி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியும் எனவும் அறிவித்துள்ளார். (ந-9)

# சத்திய தரிசனம்



முதுமையில் யார் உனக்கு உதவுவார்கள். ஆகவே இப்போது உன் புலன்களை நல்லமுறையில் பயன்படுத்து. அடுத்த விநாடி இந்த உடலுக்கு என்ன நடக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. அதனால் தேகப்பற்றுதலை வளர்த்துக்கொள்ளாதீர்கள். ஆனால் தேகத்தை நீங்கள் கவனமாகத்தான் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பிறர் உதவியை நாடாமல் இருக்கமுடியும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# காலாட்டுவது வீட்டுக்குத் தரித்திரமா?

உயர்ந்த இருக்கைகளிலோ கட்டிலிலோ குழந்தைகள் அமர்ந்து காலாட்டுவதைக் கண்டால் வீட்டுக்குத் தரித்திரம் என்று கூறி குழந்தைகளை அதட்டுவது வழக்கம். இது அன்றைய நம்பிக்கை.

காலாட்டுவதால் குடும்பத்துக்கு குழப்பங்கள் நிகழும் என்று நம்பியிருப்பதனால் அது எப்படி என்றறிய சிறுவர்கள் பெரியவர்களை கேட்பது வழக்கம். காலாட்டினால் வீட்டில் தரித்திரம் வரும் என்று அவர்கள் சிறுவயதில் கேட்டிருந்ததையே சிறுவர்களிடம் கூறிவந்தனர். இதல்லாமல் எந்தவிளக்கமும் அளிக்க அவர்களால் இயலவில்லை.

இதை ஒரு மூட நம்பிக்கை என்று கருதி அதை அலட்சியப்படுத்துவதிலேயே சிறுவர்களுக்கும் ஒரு திருப்தி. காலாட்டுவதனால் மிக அதிகம் சக்தி வீணாகிறது. இப்படி சக்தி வீணாவதனால் மட்டுமல்ல காலாட்டுவதைத் தவிர்ப்பது.

காலாட்டும் குழந்தையின் கால் தட்டி விலைமதிப்புள்ளதும் பற்றாக்குறையுள்ளதுமான பொருட்கள் நஷ்டம் வரும் என்பதிலிருந்தே காலாட்டினால் வீட்டுக்குள் தரித்திரம் வரும் என்று கூறிவருவது. பண் டைக்காலத்தில் கட்டிலுக்கடியில் வயோதிபர்களின் மருந்து, எண்ணெய், துணி, பணம் முதலிய பல பொருட் கள் வைத்திருந்தனர். வெற்றிலை துப்பும் தம்பலாய் பாத்திரமும் கட்டிலினடியிலே வைப்பதே வழக்கம்.

கீழ்ப்படியாமல் காலாட்டும் சிறுவர்களால் குப்பி, பரணி, பானை முதலியவை சரிந்து விழுந்து பொருள் நட்டத்துக்கும் காரணமாகும்.

சிறுவர்களை உணர்த்தும் வகையில் வீட்டில் தரித்திரம் வந்துசேரும் என்ற கூற்றையே திணித்தால் காலாட்டுவதை முற்றிலும் தவிர்க்கலாம். காலாட்டும்போதுதான் நம்மிலிருந்து மிக அதிகம் சக்தி வீணாகின்றது என்ற நவீன சாஸ்திரமும் சிறுவர்களை ஏற்றுக்கொள்ளவைப்பது கடினம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ம.வி. அணி வெற்றி

அகில இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்பட்ட போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலய அணி மோதின. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தர்மபுரம் ம.வி. அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. 17.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.



தர்மபுரம் ம.வி. சார்பில் நிக்சன் 10 ஓட்டத்தைப் பெற்றார். பந்துவீச்சில் கிளிநொச்சி ம.வி. சார்பில் ர.ரஜீவன் 4 இலக்கும் கோ. யதுஷன் 3 இலக்கும் ஜெ. கஜிவன் 2, ஜெ. விதுஷன் 1 இலக்குகளையும் வீழத்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி ம.வி. அணியினர் 8.2 ஓவர்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி ம.வி. சார்பில் ஜெ.விதுஷன் 26 ஓட்டமும் ர.ரஜீவன் 9 ஓட்டமும் இருவரும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். ச.டிலக்சன் 9 ஓட்டத்தையும் பெற்றார்.

# கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய வடமாகாண கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி எதிர் வரும் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது.

இவ்விறுதிப் போட்டிக்கான ஏற்பாடுகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கி. மனோகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விறுதிப் போட்டியில் A பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. B பிரிவில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# கைதடி மின்னொளி வி.க.கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் மத்தி, புத்தூர் கலைமதி வெற்றி

(வேலணை)

வடமாகாண ரீதியில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கரப்பந்தாட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இத்தொடரின் முதல் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் கோப்பாய் உதய தாரகை விளையாட்டுக்கழகமும் மோதின. இப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் முதல் சுற்றை அபாரமாக ஆடி 25:20 என்ற கணக்கில் கைப்பற்றியது.



இரண்டாம் சுற்றையும் அபாரமாக ஆடி 25:19 என்ற கணக்கில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செட்களில் வெற்றியீட்டியது. மற்றுமொரு போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதின. இப்போட்டியின் முதல் சுற்றை புத்தூர் கலைமதி 25:11 என்ற கணக்கில் எளிதாக கைப்பற்றியது. இரண்டாம் சுற்றையும் புத்தூர் கலைமதி மிகச் சிறப்பாக ஆடி 25:17 என்ற கணக்கில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றன.

# உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி.மைக்கல் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னணி நட்சத்திர அணிகள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டிகளில் நவிண்டில் கலைமதி, மயிலங்காடு ஞான முருகன் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாம் நாள் லீக் போட்டியில் முதலாவது ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை 1:0 என்ற கோல்கணக்கில் நவிண்டில் கலைமதி அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் மணற்காடு சென் அன்ரனிஸ் அணியை 4:1 என்ற கோல்கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3-24)

# அச்சுவேலி ஸ்ரார் வெற்றி

(வேலணை)

வடமாகாண ரீதியில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கரப்பந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இத்தொடரின் முதல் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதின.

மூன்றுசுற்றுக்களைக்கொண்ட இப் போட்டியின் முதல்சுற்றை அச்சுவேலி ஸ்ரார் சிறப்பாக ஆடி 25:19 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரண்டாம் சுற்றையும் அச்சுவேலி ஸ்ரார் அபாரமாக ஆடி 25:18 என்ற கணக்கில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செட்களில் வெற்றியீட்டி அடுத்தசுற்றுக்கு தெரிவாகியது.






கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவையாளர் கை.வேலாயுதப்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம், நிலையத் தலைவர் மு.விக்னேஸ்வரன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினரின் பவளவிழாவை முன்னிட்டு நிலையத்தின் பொருளாளர் மு.முரளிதரன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் மழலைகளின் உடற்பயிற்சிக் கண்காட்சியை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:- கோப்பாய் நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைவிங்கில் ரஷ்ய வீரர் தங்கம்

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் மூன்று மீற்றர் ஸ்பிரிங் போர்ட் டைவிங்கில் ரஷ்ய வீரர் இல்லியா சகரொவ் தங்கப்பதக்கம் வென்றார்.



லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான ஸ்பிரிங் போர்ட் டைவிங் போட்டி அக்வாடி சென்டரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

6 கட்டங்களாக நடைபெற்ற இப் போட்டியில் 555.90 புள்ளிகள் எடுத்து முதலாவது வந்த ரஷ்யாவின் இல்லியா சகரொவ் தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

541.75 புள்ளிகள் எடுத்து அடுத்ததாக வந்த சீன வீரர் கைகின் வெள்ளிப்பதக்கத்தையும் மற்றொரு சக நாட்டு வீரரான சோங் ஹெ 524.15 புள்ளிகள் எடுத்து மூன்றவதாக வந்து வெண்கலப்பதக்கத்தை பெற்றனர்.

# 1500 மீற். ஓட்டத்தில் அல்ஜீரிய வீரர் தங்கம்



லண்டன் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் ஆடவருக்கான 1500 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் அல்ஜீரிய வீரர் தவுபிக் மக்லோபி தங்கப்பதக்கம் வென்றார். லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் ஆடவருக்கான 1500 மீற்றர் ஓட்டப்பந்தயத்தின் இறுதிச்சுற்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட 12 நாட்டு வீரர்களில் 3:34.08 நிமிடங்களில் முதலாவதாக வந்து இலக்கை அடைந்த அல்ஜீரிய நாட்டு வீரர் தவுபிக் மக்லோபி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

அவருக்கு அடுத்தபடியாக 3:34.79 நிமிடங்களில் கடந்து 2ஆவதாக வந்த அமெரிக்க வீரர் லியானல் மான்சேனோ வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

அமெரிக்கவீரருக்கு அடுத்துவந்த மொராக்கோ நாட்டு வீரர் 3:35.13 நிமிடங்களில் தூரத்தைக்கடந்து வெண்கலப்பதக்கத்தை பெற்றார்.



பாராளுமன்ற உறுப்பினரும் நட்சத்திர துடுப்பாட்ட வீருமான சச்சின் டெண்டுல்கர் மற்றும் முன்னாள் நடிகையும் பாராளுமன்ற உறுப்பினருமான ரேகா ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த போது...

## இன்று அதிகாலை வரையான நிலைவரப்படி



## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 35 | 21 | 19 | 75 |
| அமெரிக்கா | 30 | 19 | 23 | 72 |
| பிரிட்டன் | 22 | 13 | 13 | 48 |
| தென்கொரியா | 12 | 6 | 6 | 24 |
| ரஷ்யா | 10 | 18 | 20 | 48 |
| பிரான்ஸ் | 8 | 9 | 11 | 28 |
| ஜேர்மனி | 7 | 15 | 10 | 32 |

# இங்கிலாந்து-தென்னாபிரிக்கா இரண்டாவது டெஸ்ட் சமனிலை



இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட்போட்டி சமனிலையில் நிறைவடைந்துள்ளது.

போட்டியின் 5ஆவது நாளான கடந்த ஞாயிறு அன்று முடிபொன்று பெறப்படும் வாய்ப்பு உருவாகிய போதிலும் இறுதியில் சமனிலை முடிபே பெறப்பட்டது.

விக்கெட் இழப்பின்றி 39 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் கடந்த ஞாயிறு அன்று ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டை யிழந்து 258 ஓட்டங்களைப்பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டிழப்பிற்கு 182 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி, பின்னர் விக்கெட்டுக்களை தொடர்ச்சியாக இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் ருடோல்ப் 69 ஓட்டங்களையும், கிரேம் சிமித் 52 ஓட்டங்களையும், ஏ.பி.டி. வில்லியர்ஸ் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவோர்ட் பிரோட் 5 விக் கெட்டுக்களையும், கெவின் பீற்றர்சன் 3 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அண்டர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

253 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி வேகமாக துடுப்பெடுத்தாட முயன்ற போதிலும், விக்கெட்டுக்கள் தொடர்ந்து இழக்கப்பட அந்த முயற்சியை கைவிட்டது.

இறுதியில் அவ் அணி 4 விக் கெட்டுக்களை யிழந்து 130 ஓட்டங்களை பெற்றிருந்த போது போட்டியை சமனிலையில் முடித்துக்கொள்ள இரு அணியினரும் சம்மதித்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்டையர் குக் 46 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 30 ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெயின், ஜே.பி.டுமினி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 419 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி 425 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டிருந்தன.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அதிரடிச் சதம் மற்றும் 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றி கெவின் பீற்றர்சன் தெரிவானார்.

# டெஸ்ட் ஒப்பந்தத்தில் : பீற்றர்சன்



இங்கிலாந்து அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றசனுக்கு டெஸ்ட் போட்டிகளுக்கான ஒப்பந்தம் மாத்திரம் இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் தென்னாபிரிக்க தொடரின் பின்னால் வழங்கப்படும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரராக காணப்படும் கெவின் பீற்றர்சன் ஒருநாள் சர்வதேச போட்டிகளிலிருந்து ஏற்கெனவே ஓய்வுபெற்றுள்ளார்.

அவர் இருபது-20, சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பிய போதிலும் இங்கிலாந்து கிரிக்கெட் சபையில் நடைமுறைகளின்படி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றாத ஒருவர் இருபது-20 சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியாதென்பதால் இருபது-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் அவர் ஓய்வுபெற்றார்.

இந் நிலையில் தென்னாபிரிக்கா விற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் நிறைவடைந்த பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த கெவின் பீற்றர்சன், தென்னாபிரிக்காவிற்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டி தனது இறுதி டெஸ்ட் போட்டியாக அமையாது என உறுதி வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

அத்தோடு அணிக்குள் சில விடயங்களை தீர்க்க விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார். இந்தியாவிற்கான டெஸ்ட் தொடர் இந்தியாவில் இடம்பெறவுள்ளதோடு, அடுத்த ஆஸஸ் தொடர்கள் இரண்டு அடுத்தடுத்து இடம்பெறவுள்ள நிலையில் நட்சத்திர வீரரான கெவின் பீற்றர்சனை இங்கிலாந்து கிரிக்கெட் சபை இழக்க விரும்பவில்லை எனவும், அதன் காரணமாக கெவின் பீற்றர்சனுக்கு டெஸ்ட் போட்டிகளுக்கு மாத்திரமான ஒப்பந்தத்தை வழங்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்த ஒப்பந்தத்தை கெவின் பீற்றர்சன் ஏற்றுக்கொண்டு கைச்சாத்திடுவாரா என்பது தொடர்பாக உறுதிப்படுத்த முடிந்திருக்க வில்லை.

தன்னுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இங்கிலாந்து சார்பாக கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதில்லையென்ற முடிவில் அவர் காணப்படுவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கண்ணீர் அஞ்சலி

## அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம் (ESP)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

போஸ்கோ
610/3, பருத்தித்துறை வீதி
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூரமாகத் தாக்கப்...

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டில்ருக்சன், அந்தச் சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் நடத்திய ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததையடுத்து, சிறைபிடிக்கப்பட்டிருந்த மூன்று சிறைக் காவலர்களை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கூட்டு இராணுவ நடவடிக்கையின் பின்னர், அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் மகர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

பின்னர் கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் மரணமாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது மரணம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிப்பதாகவும் மகனின் சடலத்தை தமது சொந்த ஊராகிய யாழ்ப்பாணம் பாசையூருக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவரது தந்தையார் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலை சம்பவத்தை அடுத்து, 30 தமிழ் கைதிகள் தாக்குதல்களுக்கு உள்ளாகி அவர்களில் சிலர் கை, கால்கள் முறிக்கப்பட்ட நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் வவுனியா நெலுக்குளத்தைச் சேர்ந்த கணேசன் நிமலரூபன் என்ற கைதி கடந்த மாதம் 4ஆம் திகதி ராகம வைத்தியசாலையில் மரணமடைந்திருந்தார்.

இவரது உடலை வவுனியாவுக்கு கொண்டு செல்வதற்கு பொலிஸார் மறுப்பு தெரிவித்திருந்ததையடுத்து, உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அவரது பெற்றோர் தமது வீட்டுக்கு எடுத்துச் சென்று இறுதி கிரியைகளை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மரணமடைந்துள்ள நிமலரூபன் மற்றும் டில்ருக்சன் ஆகியோருடன் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேறு சில தமிழ்க் கைதிகள் தொடர்ந்தும் அங்கு சிகிச்சை பெற்று வருவதாக, அண்மையில் அங்கு விஜயம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று நாடாளுமன்றத்தில் நடந்த விவாதமொன்றுக்கு பதிலளித்த சிறைத் துறை அமைச்சர் சந்திரசிறி கஜதீர, டில்ருக்சனின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி ஒரு வார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று உறுதியளித்தாக அந்த அமைச்சின் மூத்த ஆலோசகரான சிவலிங்கம் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார். (ந-11)

# கவனயீர்ப்புப் போரா...

ஸாரினை குறித்த ஆர்ப்பாட்டத்தினை தடை செய்யுமாறு உத்தரவிட்டார்.

தடை உத்தரவினைப் பெற்றுக் கொண்ட யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குறித்த தினத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.பஸ் நிலையத்தின் முன்பாக ஒதுக்குபுறமாகக் கூடியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர்.

இதனையடுத்து குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெறாமல் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டு யாழ்.நீதவானின் தடை உத்தரவிற்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

குறித்த தடை உத்தரவு தொடர்பாக தீர்ப்பளிக்கும் வழக்கு நேற்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில்,

யாழ்.நீதிவானது கட்டளை அரசியல் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள பேச்சு வெளிப்படுத்தல் சுதந்திரத்திற்கு முரணானது என்றும் யாழ்.நீதிவானது கட்டளை அரசியல் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள பேச்சு வெளிப் படுத்தல் சுதந்திரத்திற்கு முரணானது. ஜனநாயகத்தின் மூன்று தூண்களில் ஒன்று நீதித்துறை என்ற வகையில் நீதிபதிகள் அடிப்படை உரிமைகளை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் கடமைப்பாடு உடையவர்கள். தனது கடமையில் இருந்து தவறி பொலிஸ் உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்படுவனவற்றுக்கு அமைவாக செயற்படும் நீதிபதிகள் அத்தகைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடந்தையாக செயற்படுவதாகத் தான் கருதுவதாகவும் அவ்வாறு செயற்படுவோர் நீதி மார்க்கத்திற்கு மாறாக செயற்படத் தவறியதாக கருதவேண்டும் எனவும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

மேலும் பொலிஸார் தேவையெனில் பொது மக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்துவதற்கு சட்டத்தினால் ஏற்படக்கூடிய நிபந்தனைகளை விதிக்கலாமேயொழிய முற்றாகத் தடை செய்ய முடியாது.

அவ்வாறான நிபந்தனைகள் மீறப்படும் போதே நடவடிக்கை எடுக்கலாம் எனவும் தெரிவித்து 18.06.2012 அன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஒழுங்கு செய்யப் பட்ட நில ஆக்கிரமிப்புக்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டத்தினை யாழ்.நீதவான் வழங்கிய கட்டளையை யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தள்ளுபடி செய்ய கட்டளையிட்டுள்ளார்.

மனுதாரர் செல்வராசா கஜேந்திரன் சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், கே.சுகாஷ் ஆகியோரின் அனுசரணையுடன், சட்டத்தரணி கு.குருபரன் ஆஜராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

# டெசோ...

மாநாடு முன்னெடுத்துச் செல்லும்.

இலங்கையின் தவறான பிரசாத்தை இங்குள்ள தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் நம்பவேண்டாம் எனக் கூறியுள்ளார். (ந-2)

# இலங்கைப் படை...

பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தற்போது தமிழ்நாட்டில் எந்தவொரு இலங்கை விமானப் படை வீரரும் பயிற்சி பெறவில்லை எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடாது என தமிழக அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# ஐ.நா.மனித...

அகிலகால மீளாய்வு அமர்வுகளின்போது இலங்கை நிலைமைகள் குறித்து சில நாடுகள் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் இம்முறை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் அறிக்கையின் உட்கிடக்கை தொடர்பில் தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# த.தே.ம.மு...

கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை அமைதியாகவும் ஜனநாயக முறையிலும் நடத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கவனயீர்ப்புப் போராட்டம் நடத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசம சமாஜக் கட்சி, முன்னணி சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிய லெனினிசக் கட்சி மற்றும் சில பொது அமைப்புகளுடனும் கலந்துரையாடி மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்திற்கு பொது மக்கள், பொது அமைப்புகள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் மற்றும் அக்கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர். (ந-1)

# இம்மாத நடு...

வீடுகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், வடக்கில் படையினரால் 19 பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 55 பாடசாலை கட்டிடங்கள் திருத்தப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்திப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளில் படையினர் தொடர்ந்தும் நிலை நிறுத்தப்படுவர். எனினும் படையினரின் பிரசன்னம் பொதுமக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் அமையாது எனவும், வடக்கு கிழக்கில் காணப்படும் இராணுவ முகாம்கள் கிரமமான முறையில் குறைக்க ப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வடக்கில் நிலைநிறுத்தப்பட்டிருந்த 21 ஆயிரம் படையினர் மீள அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-2)

# 42 நாடுகளின்...

நிலையில் அதன்போது யுத்தத்தின்போதான படைத் தரப்பினரின் முன்னெடுப்புகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இருப்பினும் இம்முறை புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள் ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் என்ற அடிப்படைகளில் இந்த 3 நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நேற்றைய ஆரம்பதின நிகழ்வில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இராணுவத் தளபதி லெப்ரினட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோர் கலந்து கொண்டு விசேட உரையாற்றியதுடன் இலங்கையின் மீள்குடியேற்றம் மற்றும் மீள்கட்டுமானம் என்ற தலைப்பில் இந்திய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜி.எஸ்.சேர்கில் மற்றும் சிவில் இராணுவ ஒத்துழைப்பு என்ற தலைப்பில் அமெரிக்க இராணுவ அதிகாரியான பிரிகேடியர் றஷல் ஹவார்ட் ஆகியோர் உரையாற்றினர். (ந-11)

# கரும் தாக்கு...

உண்மையில் மரியதாஸ் சிறைச்சாலையில் இருந்தபோது மனிதாபிமான மற்ற முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தபட்டுள்ளார்.

அவர் உயிரிழக்கும்வரை கோமா நிலையில் இருந்துள்ளதுடன், அந்த நிலைமை யிலும் அவருக்கு விலங்கிடப்பட்டிருந்தமை கவலைக்குரியதாகும். அவர் வைத்தியசாலையில் இருந்தபோது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு அவரைப் பார்த்து நலம் விசாரிப்பதற்குக் கூட அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை.

அத்துடன் அவரைப் பார்க்கச் சென்ற நான் உப்பாராளுமன்றஉறுப்பினர்களையும் அதிகாரிகள் தடுத்தனர்.

இந்த துரதிர்ஷ்ட வசமான சம்பவம் குறித்து நேற்று (இன்று) பாராளுமன்றில் நடந்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசனைத்தெரிவுக் குழு கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தேன்.

தாக்குதலில் பலத்த காயமடைந்த அவர்,

கோமா நிலையில் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவுரையும், வவுனியா சிறைச் சாலையில் இருந்து மகர சிறைக்கு மாற்றப் பட்டஏனையதமிழ்க்கைதிகளையும் சந்தித்து

ஆசிர்வதிக்க நான் அழைத்துச் சென்ற மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராஜப்பு யோசப் ஆண்டகை அவர்களையும் சிறை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

மேலும் நேற்று துரதிர்ஷ்டவசமாக உயிர் நீத்த மரியதாஸின் இறுதிக்கிரியைகளில் ஜெபம் மற்றும் ஆசிர்வாதம் செய்வதற்கு மன்னார் ஆயருக்கு முடியாமல் போனதை யிட்டு நான்மனவருத்தம் அடைகின்றேன் எனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ந-11)


## நியூசிலாந்து குடும்ப விசா தற்போது இலகுவான நிபந்தனைகளுடன் சாத்தியமாகிறது ஆசிரியர்களுக்கும் ஏற்புடையது.

சர்வதேச விசா ஆலோசனை விற்பன்னர்களுடன் வியாபார ரீதியான சகவாசம் நாம் வைத்துள்ளமையால் இது சாத்தியமாகின்றது.
யாழ்ப்பாணத்திலிருந்து மூளைசாலிகள் வெளியேற்றம் சமூக நோக்கில் பாரதூரமானதென்பதால் ஆசிரியர்கள் குறைந்தளவே இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

★ கணவன் அல்லது மனைவி பட்டதாரிகள் அல்லது டிப்ளோமாதாரிகள்
★ எந்த துறையிலும் ஆங்கில மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தால் IELTS தேவையில்லை. அல்லது 6.0 புள்ளிகள் IELTS அவசியம்
★ ஆசிரியர்களுக்கு கட்டாயமாக IELTS 6 புள்ளிகள்
★ வங்கி உத்தரவாதம் 10 இலட்சம் போதுமானது
★ தாம் கற்ற துறையில் மூன்று வருட தனியார்துறை தொழில் அனுபவம்
★ சட்டரீதியான விசா ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்

காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016



(C-742)


## மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பவதி கனகரத்தினம்



நயினாதீவு 5A வட்டாரம், கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இல. 17/12, சந்தனமாதா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி கனகரத் தினம் 08.08.2012 (நேற்று) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-தங்கமுத்து தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி-நாகமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் பாசமிகு மனைவியும், திருஞானவதி (ஆசிரியை, யா/துரையப்பா ம.வி), சிவஞானம் (ஆசிரியர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), மகேந்திரன் (ஆசிரியர், லண்டன்), ரோகினி (ஆசிரியை, லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேஸ்வரன் (அதிபர், யா/அரியாலை பூம்புகார் அ.த.க. வித்தியாலயம்), கலாவதி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரேமலதா (லண்டன்), பஞ்சானந்தராசா (லண்டன்) ஆகியோரின் மாமியும், உமாலக்சி, அமுதீசன், கஜானன், சிந்துரா, லக்ஸசனா, சந்தியா, ஆதித்தியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: க. கணேஸ்வரன் (மருமகன்)
க. திருஞானவதி (மகள்)
க. சிவஞானம் (மகன்)
021-5100292

(191)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org